# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 51 ○ 10.11.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## 300 பேரைக் கடத்தி கோத்தா படுகொலை செய்தார்

உண்மையை உடைத்தார் வெள்ளைவான் சாரதி



## புலிகளை பயங்கரவாதிகள் என்ற கூட்டமைப்பினர் தேர்தல் நேரத்தில் தியாகிகள் என்று கூறுவது அரசியல் நாடகம்

மாவீரர்களின் பெற்றோர்களும், முன்னாள் போராளிகளும் விசனம்

## நிபந்தனைகளற்ற ஆதரவின் மூலமாக கூட்டமைப்பு சாதிக்கப்போவது என்ன?

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

## தமிழ்த் தேசிய விடுதலையில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு



அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் பேச்சாளர் ஸ்ரிபன் புஸ்பராஜா இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்



## சிவாஜிலிங்கத்திற்கு கிடைக்கும் வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவை

வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்


## சஜித்தை ஆதரிக்கும் கூட்டமைப்பின் முடிவால் யாருக்கு இலாபம்

சிவில் சமூகத்தினர் கூறுவது என்ன

## அறிவாயுதம் – அறிவியல் தின சிறப்புக் கட்டுரை

# புலிகளை பயங்கரவாதிகள் என்ற கூட்டமைப்பினர் தேர்தல் நேரத்தில் தியாகிகள் என்று கூறுவது அரசியல் நாடகம்

## மாவீரர்களின் பெற்றோர்களும் முன்னாள் போராளிகளும் விசனம்



இன விடுதலைக்கான போர்க்களம் புகுந்த தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களில் அவர்களை தியாகிகள் என்று கூறிக் கொண்டிருப்பதானது தமிழ் மக்களையும் விடுதலை வீரர்களின் உறவுகளையும் ஏமாற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் அரசில் நாடகமேயாகும் என்று விடுதலைக்காக தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் முன்னாள் போராளிகளும் தெரிவித்துள்ளனர். மூன்று தசாப்தங்களாக இனவிடுதலையை மட்டுமே இலக்காக வைத்து முழு வீச்சுடன் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் "பயங்கரவாதிகள்" என்று சிறிலங்கா நாடாளுமன்றத்தில் விழித்து உரையாற்றியிருந்தார். அத்துடன் ஆயுதப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் வகையில் வன்முறை கலாச்சாரம் என்றும் சம்பந்தன் சுட்டிக் கூறியிருந்தார். இந்த வார்த்தைகள் எந்தவிதமான அழுத்தத் தினாலோ அல்லது நெருக்கடியாலோ கூறப்பட்டவை அல்ல. மிகவும் தெளிவாக சிங்கள பேரினவாத சக்திகளுக்கு முண்டு கொடுப்பதற்காகவே சம்பந்தன் இவ்வாறு கூறியிருந்தார். இதேபோன்றுதான் சுமந்திரனும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# 300 பேரைக் கடத்தி கோத்தா படுகொலை செய்தார்

## உண்மையை உடைத்தார் வெள்ளைவான் சாரதி

## அதிர்ச்சியில் கோத்தா



முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபச்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளைவான் மூலம் ஆட்களை கடத்தும் விவகாரத்தில் பிரதான சூத்திரதாரியாக கோத்தபாயவே செயற்பட்டார் என்று தெரிவித்ததோடு... எனக்கு தெரிந்தவரையில் வெள்ளை வான் மூலம் 300 பேருக்கும் மேலானவர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கடத்தலுக்கு பயன்படுத்திய வெள்ளை வான் ஒன்றின் சாரதியாக பணியாற்றிய ஒருவர் இன்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளமை கோத்தபாய தரப்பினரை மிகவும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள ஜனநாயக தேசிய அமைப்பின் அலுவலகத்தில் இன்று அமைச்சர் ராஜித்த தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

தொடர்ச்சி 12ம் பக்கம்

# இரண்டாவது தடவையும் நிபந்தனையற்ற ஆதரவு ஏன்?

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி.எஸ்.சிவகரன்

எதிர்வரும் நவம்பர் 16இல் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசாவைத் தாங்கள் ஆதரிப்பது



ஒன்றும் ஆச்சரியமான விடயம் அல்ல. ஏலவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். 2015ம் ஆண்டும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து தமிழ் மக்களுக்கு கிடைத்த வரப் பிரசாதங்கள் என்ன?

கடந்த நான்கரை ஆண்டு காலம் அரசாங்கத்தைத் தாங்கிப் பிடித்தீர்கள் அதனால் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை கிட்டியதா? பாவம் தமிழ் மக்கள் எத்தனை தடவைதான் ஏமாற்றி விட்டீர்கள். உங்கள் வயதிற்கும், அறிவிற்கும். அனுபவத்திற்கும் நீங்கள் கூறிய வாசகங்கள் பொங்கலுக்குத் தீர்வு, அடுத்த தீபாவளிக்குள் தீர்வு, ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி, இதோ நல்ல செய்தி வருகிறது மைத்திரியை மண்டேலா, காந்தி என்றும் தமிழ் மக்களுக்குத் தீர்வு வந்துவிட்டது போலும். 2015ம் ஆண்டில் இருந்து அண்டப்புழுகு, ஆகாசப் புழுகுகள் கூறி ஏமாற்றினீர்கள். மூன்று தடவை நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் இருந்து அரசைப் பாதுகாத்தீர்கள். இதன்மூலம் தமிழ்மக்களுக்கு கிடைத்த நன்மைகள் என்ன? சில இடங்களில் காணி விடுவிக்கப்பட்டதைத் தவிர. அவையும் முழுமை அல்லவே எதுவித முன்னேற்றகரமான விடயங்களும் நடைபெறவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை. புதிய அரசியல் அமைப்பு முயற்சி முற்றுப் பெறாது என்று ஏலவே தெரிந்த விடயம் இனப் பிரச்சனைக்கான தீர்விற்கு

தொடர்ச்சி 4ம் பக்கம்

# நிபந்தனைகளற்ற ஆதரவின் மூலமாக கூட்டமைப்பு சாதிக்கப்போவது என்ன?

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

"தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை உள்ளடக்கிய 13 அம்சக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு, சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனைகளற்ற ஆதரவை வழங்குவதன் மூலமாக தமிழ் மக்களுக்கு எதனையாவது பெற்றுக்கொடுக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நம்புகின்றதா?" எனக் கேள்வி எழுப்பியிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம், "கடந்த கால வரலாற்றிலிருந்து கூட்டமைப்பின் தலைமை எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான் அவர்களுடைய இந்தத் தீர்மானம் வெளிப்படுத்துகின்றது" எனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"பல்கலைக்கழக மாணவர்களின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கே தயாரில்லை என்று கூறிய சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனைகளற்ற ஆதரவை வழங்குவதற்கு கூட்டமைப்புத் தலைமை தன்னிச்சையாக எடுத்த முடிவு மற்றொரு வரலாற்றுத் தவறு" எனவும், ஆய்வு மையம் கண்டித்திருக்கின்றது. இது தொடர்பில் மையத்தினால் வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

"நடைபெறப்போகும் சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலில் நிபந்தனைகளற்ற வகையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எடுத்த முடிவு, வரலாற்றிலிருந்து அவர்கள் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றது. 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலிலும் இதேபோல, மைத்திரிபால சிறிசேனவுக்கு நிபந்தனைகளற்ற ஆதரவை வழங்கிய கூட்டமைப்புத் தலைமை, அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுத்தது? அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வும் வழங்கப்படவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு பகுதி நிலம் விடுவிக்கப்பட்டதைவிட வேறு எந்த நலன்களையும் கடந்த ஐந்து வருட காலத்தில் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 16 எம்.பி.க்கள் என்ற பலத்தை மக்கள் பெற்றுக்கொடுத்திருந்தார்கள். அந்தப் பலத்தை வைத்து அவர்கள் பேரம் பேசியிருக்க முடியும். பதிலாக, ரணில் அரசைப் பாதுகாப்பதற்காக மட்டுமே அந்தப் பலத்தை அவர்கள் மூன்று தடவைகள் பயன்படுத்தினார்கள். வரவு செலவுத் திட்டங்களின் போது அந்தப் பலத்தை தமது தனிப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே அவர்கள் உபயோகித்தார்கள். இப்போது

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மஹிந்தவையும் ரணிலையும் திருப்திப்படுத்தும் ரெலோ

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக வவுனியாவில் கூடிய ரெலோ தீர்மானித்திருந்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சஜித்துக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்திலும் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கையொப்பமிட்டிருந்தார். இந்நிலையில் திடீரென சனிக்கிழமை கூடிய ரெலோவின் யாழ்.மாவட்ட கிளை அதற்கு எதிர்ப்புத்தெரிவித்து சஜித்தை ஆதரிக்கும் முடிவு தவறானது என்றும் சனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்தினை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இவ்வாறு கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளமையால் அவற்றை தீர்த்து முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காக ரெலோவின் தலைவர் யாழிற்கும், மன்னாருக்கும், வவுனியாவுக்கும் இடையில் அலைக்கழிந்து வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக கூட்டமைப்பின் சஜித் ஆதரவு பிரசார கூட்ட மேடைகளில் அவர் பங்கேற்பதை தவிர்த்துள்ளார். குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு ஆகிய கூட்டங்களில் அவர் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் ரெலோவின் மாறுபட்ட முடிவுகள் அந்த இயக்கத்தினுள் கொந்தளிப்பினை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும் உண்மையிலேயே ரணிலை ஆதரிப்பதால் மகிந்தவும், மகிந்தவை ஆதரிப்பதால் ரணிலும் ரெலோ மீது கோபித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு கட்சியினுள் குழப்பான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாக அந்த இயக்கத்தின் உள்வீட்டுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. கட்சிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ரெலோ தலைவர் பணியாற்ற வேண்டியமையால் சஜித் பிரச்சார கூட்டங்களில் பங்கேற்காமைக்கு தகுந்த காரணத்தினையும் சம்பந்தனிடத்தில் கூற முடியும் என்பதால் எவ்விதமான சந்தேகங்களும் ஏற்படாது என்றும் இதன்மூலம் ரணிலுடனும் மகிந்தவுடனும் ரெலோ முரண்பட்டுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படாது என்றும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## கோத்தாவை எதிர்த்து பௌத்த பிக்கு உண்ணாவிரதம்




கோத்த பாய ராஜபக்சவின் அமெரிக்கப் பிரஜா வுரிமை நீக்க ப் பட்டமையை உறுதிப் படுத்துமாறு கோரி உண்ணாவிரத போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது. இங்குருவத்தே சுமங்கல தேரரினால் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இன்று (10) காலை முதல் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கப் பிரஜாவுரிமையை நீக்கிக் கொண்டமை தொடர்பாக 3 நாட்களுக்குள் உறுதிப்படுத்த வேண்டும் என கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை அவர் முன்னெடுத்துள்ளார்.

அமெரிக்க பிரஜாவுரிமை நீக்கப்பட்டவர்களின் புதிய பட்டியலை நேற்று வெளியிட்டது. அதில் நந்தசேன கோத்தாபய ராஜபக்சவின் பெயர் இதுவரை உள்ளடக்கப்படவில்லை. எனினும், கோட்டாபய ராஜக்ச தனது அமெரிக்க குடியுரிமையினை கைவிட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

# சனாதிபதித் தேர்தலும் தமிழ்க் கட்சிகளின் முடிவும்!

தமிழர்கள் எதிர்கொள்ளும் அரசியல், அன்றாட பிரச்சினைகளை உள்ளடக்கிய 13 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்த, தமிழ் கட்சிகள் இப்போது அதனை அப்படியே போட்டுவிட்டு — தனித்தனியாக செல்வதற்கு தீர்மானித்திருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவுடன் இந்த ஆவணத்தை முன்வைத்து 5 தமிழ் கட்சிகள் இணைந்தபோது, உற்சாகமடைந்த தமிழ் மக்கள் இப்போது மீண்டும் நம்பிக்கை இழந்து போயுள்ளனர். தமிழ் கட்சிகள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தான் செயற்படுகின்றன என்பதற்கு இது மற்றொரு உதாரணம். கோரிக்கைகளில் இணைந்த தமிழ் கட்சிகள், தனித்தனியான நிகழ்ச்சி நிரல்களை வைத்துக்கொண்டு தான் பேச்சுவார்த்தைக்கு வந்தார்களா என்ற கேள்வி இப்போது எழுகின்றது. தமிழ் கட்சிகளின் இந்த செயற்பாடு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை சீற்றமடையச் செய்திருக்கின்றது. "பல்கலைக்கழக மாணவர்களை மட்டுமன்று ஒட்டுமொத்த சமூகத்தையும் இந்த தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றி விட்டன "என மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஆதங்கத்துடன் கூறியிருக்கின்றார்கள். "தமிழர் தரப்பின் ஒற்றுமைக்காகவும், பிரதான பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றை தயாரித்து சனாதிபதி வேட்பாளர்களிடம் கையளிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை — தங்களுடைய அரசியலுக்காக முந்திக்கொண்டு அறிக்கைகளை வெளியிட்டும் தமது நிலைப் பாடுகளை அறிவித்தும் எல்லாவற்றையும் குழப்பி அடித்து அனைவரையும் ஏமாற்றி முட்டாளாக்கி உள்ளனர்" என தமிழ் கட்சிகள் மீது அவர்கள் குற்றச்சாட்டை முன் வைத்திருக்கின்றார்கள்.

இந்த குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை. அதற்கு பதிலளிக்க வேண்டிய கடமைப்பாடு தமிழ் கட்சிகளுக்கும் இருக்கின்றது. பொதுவான கோரிக்கைகளில் ஒன்றுபட்ட தமிழ் கட்சிகள் அந்தக் கோரிக்கைகளை சனாதிபதி வேட்பாளர்களிடம் கொண்டுசென்று சேர்க்கவில்லை. அவர்களுடன் பேரம் பேசவும் முயற்சிக்கவில்லை. தமிழ் மக்கள் கூட்டணியில் செயலாளர் நாயகம் சி வி விக்னேஸ்வரன் மட்டும் அந்தக் கோரிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பிரதான வேட்பாளர்கள் அனைவரிடமும் அவற்றை ஒப்படைத்திருந்தார். தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்பன இந்த கோரிக்கைகளை சனாதிபதி வேட்பாளரிடம் கொண்டு செல்வதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. "விஞ்ஞாபனங்களைப் பார்த்து தீர்மானம் எடுப்போம்" என்ற நிலைப்பாட்டிற்கு இந்த கட்சிகள் வந்திருந்தன. இறுதியில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றன.

தமிழ் தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கோ, அது தொடர்பில் பேசுவதற்கோ தயாராக இல்லாத சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை இந்த கட்சிகள் எடுத்ததற்காகத் தெரிவிக்கும் காரணங்கள் நியாயமானவையாகத் தெரியவில்லை. 13 அம்சக் கோரிக்கையை தயாரிப்பதற்கு முன்னதாகவே சஜித்தை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை இந்த கட்சிகள் எடுத்து இருப்பதாகவே தெரிகின்றது. அதற்குப் பின்னர் தங்களுடைய சுயலாப பேரம் பேசும் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக 13 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுகின்றது. தமிழரசு கட்சியின் மீது அண்மைக்காலமாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பது மட்டுமே அவர்களின் நிகழ்ச்சி நிரல் என்பது முக்கிய குற்றச்சாட்டு. தமிழ் தரப்பால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை எடுத்துச் சென்று அதற்கான அழுத்தத்தை வழங்குவதற்கு கூட்டமைப்பு தயங்கியிருந்தது. 16 எம்.பி.க்கள் என்ற பலம் தமிழர்களுடைய நலன்களுக்காக பயன்படுத்தப்பட்டதை விட, அரசாங்கத்தை பாதுகாப்பதற்கே அதிகளவு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் தமிழரசுக் கட்சியின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்திருந்தார்கள்.

13 அம்சக் கோரிக்கையில் இணங்கிவந்திருந்ததன் மூலம் தம்மீதான இந்தக் களங்கத்தை — கறையைத் துடைத்துக்கொள்ள தமிழரசுக் கட்சி முற்பட்டது. அதற்காக மாணவர்களையும், மக்களையும் முட்டாள்களாக்கியுள்ளனர். மறுபக்கம் ஐ.தே.க. தலைமையுடன் தமது பேரம் பேசும் பலத்தை அதிகரிப்பதற்கு இதனை அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆக, தமது அரசியல் நலன்களுக்கு இதனைப் பயன்படுத்திக்கொண்டு தமது பாதையில் செல்வதற்கு தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் முடிவுக்குத் தலையாட்டுபவர்களாகவே ரெலோவும், புளொட்டும் இருக்கின்றன. இந்த நிலையில் இவர்களிடமிருந்து மக்கள் எதைத் தான் எதிர்பார்க்க முடியும்?முள்ளிவாய்க்காலின் பின்னர் பத்தாண்டுகள் கடந்தும் தமிழ்த் தேசிய அரசியலை தெளிவான பார்வைகளோடு வழிநடத்த வல்ல தீர்க்கமான தலைமை இன்னமும் தமிழ் மக்களிடமிருந்து தெளிவாக வெளிப்படவில்லை என்பதே மீண்டும் நிரூபணமாகி உள்ளது.

தமிழ்த் தேசிய இலக்குக்காக களமாடி விதையாகிய எங்களது மாவீரச் செல்வங்களின் நினைவேந்தல் மாதத்தில் நின்று கொண்டிருக்கின்றோம். தங்களையே ஆகுதியாக்கி தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுத்தவர்களுக்கு மத்தியில் தங்களது சொந்த நலன்களுக்காக தமிழ்த் தேசியத்தை விலைபேசும் அரசியல் வியாபாரிகளை தமிழினம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலில் தன்னலமில்லாத தமிழ்த் தலைமைகள் மக்களுக்கான அரசியல் செய்கின்ற காலத்தை எமதாக்க வேண்டும். பல்கலைக் கழக சமூகமும் சிவில் சமூகமும் தெளிவான பார்வைகளோடு ஒரு வலுவான மக்கள் தளத்தை உருவாக்க வேண்டும். எங்களது பலம் எங்களின் கைகளிலேயே என்பதைப் புரிந்து கொண்டு மக்களுக்கான அரசியல் பணிகளை தமிழ்த் தேசிய இலக்கு நோக்கி முன்னெடுக்க உண்மைத் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும்.

- ஆசிரியர்

# தமிழர்களை ஏமாற்றுவதற்கு சம்பந்தனின் சமஷ்டி அஸ்திரம்

எந்தவிதமான நிபந்தனையும் விதிக்காது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமாஸவுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்மைப்பு தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இந்த பிரசாரமானது வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் என நகரவுள்ளதோடு நாளை கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப் படவுள்ளது. மேற்படி பிரச்சாரக் கூட்டங்கள் அனைத்துமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலேயே முன்னெடுக்கப்படுகின்றது. சனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஸ்டி ஒழிந்திருப்பதாக வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தின்போது சம்பந்தன் தடாலடியாக கூறியுள்ளார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

2ம் பக்கத் தொடர்ச்சி...நிபந்தனைகளற்ற

மீண்டும் நிபந்தனைகளற்ற ஆதரவை சஜித் பிரேமதாசவுக்கு வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளின் சந்திப்பில் கலந்துகொண்ட அவர்கள், தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் 13 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதில் கையொப்பமிட்டார்கள். ஆனால், அந்தக் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கூட தயாராகவில்லாத சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக இப்போது அறிவித்திருக்கின்றார்கள். தமது இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் அவர்கள் தெரிவிக்கும் காரணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கே தயாரில்லாத ஒருவருக்கு ஆதரவளிப்தென கூட்டமைப்பு எடுத்திருக்கும் முடிவு மற்றொரு வரலாற்றுத் தவறாகும். கடந்த கால வரலாற்றிலிருந்து கூட்டமைப்பின் தலைமை எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதைத்தான் அவர்களுடைய தீர்மானம் வெளிப்படுத்துகின்றது. தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் 13 அம்சக் கோரிக்கையில் கையொப்பமிட்ட கூட்டமைப்பின் தலைமை, இணக்கத்தை ஏற்படுத்திய மாணவர்களையும் மக்களையும் முட்டாள்களாக்கிவிட்டு, நிபந்தனைகளற்ற ஆதரவை சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியிருக் கின்றது. இதன்மூலம், தமிழ்க் கட்சிகளிடையேயான புரிந்துணர்வு குறுகிய காலத்தில் மரணித்துவிட்டது. 13 அம்சக்கோரிக்கைகளும் கைவிடப்பட்டவையாகி விட்டன.

கூட்டமைப்பின் தலைமை வழமை போல செயற்பட்டாலும் கூட, பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றியம், அந்தக் கோரிக்கைகளை உயிர்ப்புடன் வைத்திருப்பதுடன், அதனை ஆதரித்துச் செயற்படக்கூடிய கட்சிகள், அமைப்புக்களுடன் இணைந்து வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியம் என்பதுடன் தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்க மறுத்த சிங்களத் தலைமைகளை முற்றாக புறக்கணிக்கும் முடிவை தமிழ் மக்கள் இந்த தேர்தலில் இருந்து ஆரம்பிப்பார்களானால் அது எமது விடுதலை நோக்கிய பயணத்தின் அடுத்த பரிமாணமாக இருக்கும்” என ஆய்வு மையம் தனது அறிக்கையில் வலியுறுத்தி யிருக்கின்றது.

2ம் பக்கத் தொடர்ச்சி...புலிகளை

விடுதலைப்புலிகளின் கொள்கைகளை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் வெளிப்படையாகவே கூறியிருந்தார். இத்தகைய அணியினர் தற்போது தேர்தல் மேடைகளில் விடுதலைப் புலிகளின் தியாகம் பற்றி பேசுகின்றார்கள். அவர்களிடத்தில் காணப்பட்ட பேரம்பேசும் சக்தி பற்றி பேசுகின்றார்கள். இவை அனைத்துமே நாடகமாகும். இவர்களுக்கு தமிழீழ விடுதலையில் உயிர்நீத்த எந்தவொரு ஆன்மாவின் பெயரைக் கூட உச்சரிப்பதற்கே அருகதை அற்றவர்கள்.

அவ்வாறு இருக்கையில் விடுதலைப் புலிகளின் தியாகத்தினையும், பேரம்பேசும் சக்தியும், விடுதலைக்கான புனிதமான போராட்டத்தினையும் சனாதிபதி தேர்தல் பரப்புரைக்காக பயன்படுத்துவதானது மிகக்கேவலமான அரசியல் நடத்தையாகும். தமிழர் தாயகத்தில் கூட்டமைப்பினர் இவ்வாறான செயற்பாட்டில் அடுத்துவரும் நாட்களில் அதிகமாக செயற்படுவதற்கு நாம் இடமளிக்கவே கூடாது என்றும் அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என்றும் உறவுகள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2ம் பக்கத் தொடர்ச்சி...இரண்டாவது

எதுவித முனைவும் மேற்கொள்ளவில்லை. மாறாக கூட்டமைப்பினர்தான் பதவி அனுபவித்தீர்கள். எதிர்கட்சித் தலைவர், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் பதவிகள், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உத்தியோக பற்றற்ற அமைச்சர் இந்த அரசுடன் ஐக்கிய உறவாக இருந்தீர்கள். தமிழ்த் தேசியத்திற்கு பெரும் துரோகம் செய்த டக்ளஸ் தேவானந்த கடந்த காலத்தில் செய்த பிற்போக்குத் தனமான விடயங்களையே நீங்களும் மேற்கொண்டு மென்சக்தி நகர்வில் தமிழ்த் தேசிய நீக்கத்தில் ஈடுபட்டீர்கள். சிங்கள கட்சிகளுக்கு தமிழர்கள் வாக்களிக்கும் மனநிலையை ஏற்படுத்தியது நீங்கள்தான்.

தமிழ்த் தேசிய வரலாறு உங்களை ஒருபோதும் மன்னிக்காது. வரலாறு உங்களை துரோகியாகவே பதிவுசெய்யும் என்று 2014ம் ஆண்டு கட்சி மகாநாட்டில் உங்கள் முன்னிலையிலே கூறியவன் அடியேன். நிபந்தனையற்ற ஆதரவில் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் பெற்றுத்தராது என உங்கள் பேரப் பிள்ளைக்கு சமனான என்னால் 2014ஆம் 2015ஆம் ஆண்டில் கட்சி கூட்டத்திலும், பொதுவெளியிலும் முன்வைத்த அனைத்து விடயங்களும் சரியாகிவிட்டது. அந்த முரண்பாட்டினால்தான் கட்சியைவிட்டு வெளியேறினோம். உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். 2015ம் ஆண்டில் விட்ட அதே வரலாற்றுத் தவறைத்தான் இந்த சனாதிபதித் தேர்தலிலும் செய்துள்ளீர்கள்.

தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அடிப்படைப் பிரச்சனையும் தீராதபோது கண்ணை மூடிக்கொண்டு எழுபது ஆண்டுகளாக சுதந்திர வாழ்வுரிமைகோரி போராடியவர்கள் தமிழ்மக்கள் மூன்று தசாப்தங்களுக்குமேல் விடுதலைநோக்கி ஆயுதமுனையில் போராடி விடுதலை வேள்விக்காய் பல இலட்சம் தமிழ்மக்களின் இன்னுயிர்கள் ஆகுதியாகின. இறுதியில் இந் நூற்றாண்டின் நன்கு திட்டமிட்ட இனப்படுகொலையும் முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றப்பட்டன. ஒவ்வொரு தமிழன் உயிரும் எதற்காக இந்த மண்ணில் மடிந்தது என்பதுகூட உங்களுக்குத் தெரியாதா நிபந்தனை அற்று சிங்களவருக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுக்கவல்லான்மை இல்லாத வழிப்போக்கன் இனம் இல்லை. விடுதலைக்காகப் போராடிய வீறுகொண்டு எழுந்த இனம். நீங்கள் பன்நாட்டுத் தூதரகங்களின் அனுசரணையுடன் நிபந்தனையின் அடிப்படையில் ஆதரித்திருக்க வேண்டும். நிபந்தனைகளுக்கு காலநிர்ணயம் செய்திருக்க வேண்டும். உங்கள் மனச்சாட்சிகளைத் தொட்டுச் சொல்லுங்கள் டி.எஸ்.சேனநாயக்க தொடக்கம் இன்றைய மைத்திரிபால சிறிசேன வரை தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நேசகரம் நீட்டிய தலைவர்கள் உண்டா? காலத்திற்கு காலம் எல்லாத் தலைவர்களும் ஏமாற்றினார்கள். என்னும் வரலாறு தாங்கள் அறியாமல் இல்லை இழப்பதற்கு எதுவும் இல்லாத அளவிற்கு எஞ்சிய உயிரைத் தவிர எதுவும் இல்லாத ஏதிலி தமிழர்களுக்குத் தலைமை தாங்கும் தார்மீக தகுதியை இழந்துவிட்டீர்கள். நீங்கள் நினைத்திருந்தால் ஒவ்வொரு தடவையும் நம்பிக்கை வாக்கெடுப்பு வரும்போது பல அன்றாட பிரச்சனைகளைத் தீர்த்திருக்கலாம். குறைந்தபட்சம் கல்முனை பிரதேச செயலக விடயம்கூட கைகூடவில்லை. அரசாங்கத்தின் இதயத்தில் இருக்கிறோம். புதிய அரசியல் அமைப்பு உருவாக்க முடியவில்லை என்றால் அரசியலை விட்டு விலகுவேன் என்றார் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். செய்தீர்களா?

ரணில் அரசைக் காப்பாற்ற நீதிமன்றபடி ஏறியது போல் காணாமல் ஆக்கப்படடோருக்கும் அரசியல் கைதிகள் விடுதலைக்கும் நீதிமன்றப் படி ஏறி இருக்கலாமே! கம்பரலியாவில் காட்டிய வேகம் தமிழ் மக்கள் நலனில் காட்டவில்லை. உங்கள் அரசியல் சித்தாந்தம் தோற்றுவிட்டது தமிழ் மக்களின் கூட்டுத் தலைமையை ஏற்கும் தகுதியை இழந்துவிட்டீர்கள். உலகம் முழுவதும் அரசியல் தலைவர்கள் தமது வழி வரைபட சித்தாந்தம் தோற்றுவிட்டால் விலகிவழி விடுவதே உண்மையான சனநாயகப் பிரதிநிதித்துவ அரசியல் முறைமை.

ஆகவே, மேலும் தமிழ் மக்களை ஏமாற்றாமல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் “காற்று இடைவெளியை நிரப்பும் தேசம் தன் தலைமையைத் தீர்மானிக்கும்” இனப்படுகொலை செய்த கோத்தபாய வந்தால் என்ன? இதுவரைகோட்பாடுகள் இன்றி தூரநோக்கு இன்றிப் பேசும் சஜித் பிரேமதாச வந்தால் என்ன? எதுவும் நடக்கப்போவது இல்லை. தேர்தல் விஞ் ஞாபனம் என்பது ஒரு சட்ட ஆவணம் இல்லை. அதை நிறைவேற்ற வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை. கூட்டமைப்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒருபோதும் பின் பற்றுவதில்லை. பெரும்பான்மையான தமிழ் மக்கள் இனியும் உங்களை நம்பமாட்டார்கள். பல இயக்கங்கள், கட்சிகள் வந்தபோதும் புலிகளை மட்டும் ஏன் தமிழ்மக்கள் விசுவாசித்தார்கள்.

அவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றவில்லை. தமிழரசுக் கட்சித் தலைமை என்பது ஆளுமை இல்லாத வெறும் இறப்பர் முத்திரைதான். பல்கலைக்கழக மாணவர்களையும் போலி ஒப்பந்தம் செய்து ஏமாற்றினீர்கள். கூட்டமைப்பின் ஏமாற்று நாடகத்திற்கு ஆமாசாமி போடும் பங்காளிக்கட்சித் தலைவர்களும், கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் தூர நோக்கை இலக்காகக் கொணடு இனியாவது சிந்திப்பதற்கு முன்வாருங்கள் என வேண்டுகை விடுக்கின்றோம்.

# சஜித்தை ஆதரிக்கும் கூட்டமைப்பின் முடிவால் யாருக்கு இலாபம்

## சிவில் சமூகத்தினர் கூறுவது என்ன

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முடிவால் சிங்கள தேசத்தின் காலடியில் தமிழினம்



**அருட்தந்தை சக்திவேல்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையின்றி சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவால் ஒட்டுமொத்த தமிழினத்தினையும் சிங்கள தேசத்திடம் காட்டிக்கொடுத்த அவர்களின் காலடிக்குள் கொண்டு சென்றுவிட்டுள்ளதாக அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் கட்டமாக குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்கள் சார்ந்து பொதுவேட்பாளரை நிறுத்துதல், மற்றும் 13அம்சக்கோரிக்கைளை ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூட்டிணைந்து முன்வைத்தமை போன்ற முயற்சிகளையெல்லாம் மலினப்படுத்தி புறந்தள்ளிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏதேச்சதிகாரமாக சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவினை எடுத்துள்ளது.

இதனால் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நலன்களும் கிடைக்கப்போவதில்லை. கோத்தபாய போர்க்குற்றங்களை புரிந்தவர். ஜனநாயக விரோதியானவர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் போராட்டங்களுக்கும், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பிலும் தனது அரசியல் வரலாற்றில் சஜித் பிரேமதாஸ எந்தவொரு வார்த்தையையும் வெளியிட்டிருக்கவில்லை. மேலும் மகிந்தவின் காட்டாட்சி நடைபெற்ற தருணத்தில் சஜித் பிரேமதாஸ மௌனமாகவே இருந்துள்ளார். இந்த செயற்பாடானது அவர் சிங்கள தேசிய வாத அடக்குமுறைக்கு துணைபோகின்றார் என்பதையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. இவ்வாறான ஒருவரை ஆதரிப்பதால் தமிழ் மக்களுக்கு என்ன பயன்? கூட்டமைப்பு தனது நலன்கள் சார்ந்தே அவரை ஆதரிக்கும் முடிவினை எடுத்துள்ளது.

அதுமட்டுமன்றி சஜித் பிரேமதாஸ வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மட்டுமன்றி மலையக தமிழ் மக்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தி தீர்வு முன்மொழிவுகளைச் செய்ததாய் இல்லை. ஆகவே கோத்தாவுக்கும், சஜித்துக்கும் பாரிய வேறுபாடுகள் இல்லை. வெறுமனே இருவரின் சின்னங்கள் மட்டும் தான் வேறுபட்டிருக்கின்றன. மேலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கூட்டமைப்பிற்கும் சம்பந்தனுக்கும் இடையிலான உறவு பலமானது. எனினும் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானமானது சுமந்திரனின் திணிப்பால் சம்பந்தனும் இணைந்தெடுத்ததொரு முடிவாகவே பார்க்க வேண்டியுள்ளது. இந்த முடிவில் பங்காளிக்கட்சிகளோ ஏன் தமிழரசுக் கட்சிகளின் பிரதிநிதிகளோ செல்வாக்குச் செலுத்தவில்லை. ஆனால் அவர்களும் திராணியற்ற அரசியல் செயற்பட்டால் இந்த முடிவுகளுடன் இணைந்து செல்கின்றார்கள். கூட்டமைப்பின் நிபந்தனையற்ற முடிவானது பலவீனப்பட்டுள்ள தமிழ்த் தேசிய சிந்தனையும், கையறு நிலையில் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளையும் மேலும் சிர்குலைப்பதாகவே இருக்கும் என்றார்.

### தாயகத் தமிழினமே ஏமாற்றப்பட்டுள்ளது



**யாழ்.பல்கலை மாணவர் ஒன்றிய செயலாளர்**

எட்டாவது சனாதிபதி தேர்தல் தொடர்பில் ஐந்து கட்சிகளும் தனித்தனியாக அறிவிப்பினை விடுத்து எம்மை மட்டுமல்ல தாயகத்தில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் மக்களையுமே ஏமாற்றிவிட்டுள்ளன என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பி.எஸ். பபிலராஜ் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் உடனடி மற்றும் நீண்டகால பிரச்சினைகளை உள்ளடக்கிய 13அம்சக்கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டு சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களிடத்தில் தனித்தனியாக கையளித்து எமது பேரம்பேசும் சக்தியை அதிகரிப்பதோடு நிபந்தனைகளின் பிரகாரமே இறுதி முடிவு எடுப்பதாக தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள ஐந்து கட்சிகளும் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தன என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அத்துடன் இந்தக் கோரிக்கைகளை வேட்பாளர் களிடத்தில் முன்வைப்பதென்றும் அவர்கள் இதனை ஏற்க மறுகின்றபோது அடுத்தகட்டமாக ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்தே இறுதிமுடிவினை அறிவிப்பதென்றும் இணக்கப்பாடும் எடுக்கப்பட்டது. ஈற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியானது தனது முடிவினை தனித்து அறிவிக்க ஆரம்பித்ததை அடுத்து ஏனைய கட்சிகளும் தனித்தனியாக முடிவுகளை வெளியிட்டுள்ளன. நாம் இளையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். எம்மை இலகுவாக ஏமாற்றலாம் அல்லது அனுபவ பற்றாக்குறையை உதாரணமாக காட்டலாம். ஆனால் எமது மக்களுக்காக எமது இனத்தின் பேரம்பேசும் சக்தியை தென்னிலங்கைக்குக்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்துவதற்காகவே சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து நாம் தமிழ்த் தேசியப்பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்தோம்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

### எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கூட்டமைப்பு சஜித்தை ஆதரிக்கவில்லை



**வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் இணைப்பாளர்**

எமது உறவுகளை தொலைத்துவிட்டு அந்த உறவுகளுக்கு எந்த நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நாம் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான நிலையில் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் எமது விடயத்தினை ஒருபொருட்டாக கூட சிங்கள தேசியவாத தலைவர்கள் எடுத்துக்கொள்ளாத நிலையில் தமிழ்த் தரப்பினர் நிபந்தனையற்ற ஆதரவினை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியுள்ளார்கள். அவ்வாறான ஆதரவால் எமது உறவுகள் மீண்டுவரப்போவதில்லை. கூட்டமைப்பு தமது அரசியல் நலனுக்காகவே அத்தகைய முடிவினை எடுத்துள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் லீலாதேவி நடராஜா காட்டமாக தெரிவித்துள்ளார். எமது உறவுகளை நேரடியாக கையளித்தும், சரணடையச் செய்தும், விசாரணைக்காக அழைத்துச் சென்றும் தான் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். இதற்கான சாட்சியாளர்களாக நாங்களே இருக்கின்றோம். கண் கண்ட சாட்சிகள் இருக்கின்றபோதும் இதுவரையில் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தற்போது வரையில் அறியமுடியாது உள்ளது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக நாம் செல்லாத இடமில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் எந்தவொரு பதிலையும் வழங்குவதற்கு தயாரில்லை. மாறாக எமது போராட்டங்களை மலினப்படுத்தி எம்மை அடக்குவதற்கே முயல்கின்றன. இதற்கு கூட்டமைப்பும் பூரண ஆதரவினை வழங்குகின்றமை துர்ப்பாக்கிய நிலைமையாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவின் பொறுப்புக்கூறலுக்காக இரண்டு ஆண்டுகள் கால அவகாசத்தினை கூட்டமைப்பு பெற்றுக்கொடுத்துள்ளதோடு ஆட்சியாளர்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் காப்பற்றியுமுள்ளனர். ஆனால் தற்போது வரையில் நாம் வீதியில் போராடிக்கொண்டே இருக்கின்றோம்.

கிளிநொச்சியில் 2017 மாசி 20ஆம் திகதி போராட்டத்தினை ஆரம்பித்திருந்தோம். எமது போராட்டம் ஆரம்பித்து ஆயிரமாவது நாளான நவம்பர் 16ஆம் திகதி தான் சனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஆனால் எமக்கு இந்த சனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்களும் சரி, அவர்களை ஆதரிப்பவர்களும் சரி, எந்தவொரு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்று வாக்குறுதியைக் கூட வழங்கவில்லை. ஆகக்குறைந்தது எமது விடயத்தினை ஒரு பொருட்டாக கூட எடுத்துக்கொள்ளவுமில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளீர்க்கவுமில்லை. இந்நிலையில் எமது பிரதிநிதிகள் எம்மினம் சார்ந்து செயற்படுகின்றார்கள் என்று எவ்வாறு சொல்ல முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

### எம்மினத்தின் எதிர்காலம் கேள்விக்குறி



**கிழக்குப் பல்கலை மாணவன்**

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான சக்திகளின் ஒன்றிணைவால் தமிழ் தேசிய அரசியலின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாக கிழக்குப் பல்கலைகழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் எம்.புவனராஜ் தெரிவித்தார். தமிழர் தாயகத்தின் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் ஐந்து அரசியல் கட்சிகளையும் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து 13அம்சக்கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டபோதும் தற்போது அக்கோரிக்கைகள் கைவிடப்பட்டுள்ளதோடு ஐந்து கட்சிகளினதும் இணக்கப்பாடும் முறிந்துபோயுள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளும் ஒருவழியிலும் ஏனைய கட்சிகள் இரண்டும் பிறிதொரு வழியிலுமான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டமையானது மிகவும் துரதிஸ்டவசமானதாகும். காரணம், தமிழ் தேசிய அரசியல் சக்திகளின் ஒன்றிணைவானது பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தும் ஒரு

தொடர்ச்சி 12ம் பக்கம்...

# சிவாஜிலிங்கத்திற்குக் கிடைக்கும் வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவை

சனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கத்திற்கு கிடைக்கும் வாக்குகள் அனைத்தும் தமிழ்த் தேசியத்திற்கான பற்றுறுதியுடன் இதயசுத்தியுடன் அளிக்கப்படும் வாக்குகளே ஆகும் என்று ஈழத்தமிழர் சுயாட்சிக்களத்தின் செயலாளர் நாயகமும் வடமாகாண முன்னாள் அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழுவடிவம் வருமாறு,

**கேள்வி:- தமிழர் ஒருவர் சனாதிபதியாக வரமுடியாமையை உணர்ந்திருந்தும் சனாதிபதி தேர்தல் களத்தில் உங்கள் ஆதரவுடன் சிவாஜிலிங்கம் களமிறங்கியுள்ளமைக்கான காரணம் என்ன?**



**வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் சிறப்பு நேர்காணல்**

பதில்:— சிங்கள, பௌத்த மேலதிக்கவாத சிந்தனையுடன் இருக்கும் இந்த நாட்டில் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த ஒருவர் தப்பித்தவறிக்கூட சனாதிபதி அரியாசனத்தில் அமர்ந்துவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தென்னிலங்கை தலைவர்கள் மிகக் கவனமாக இருந்து தான் அரசியலமைப்பினை தயாரித்துள்ளார்கள்.

உண்மையிலேயே போருக்கு பின்னரான சூழலில் போரின் வடுக்களை சுமந்துகொண்டு தாயகத்தில் வாழும் நாம் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதை ஒருதடவையேனும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் தமிழர்களுக்கு எதனையும் வழங்கக் கூடாது என்ற சிந்தனையில் இருக்கும் வேட்பாளர்களை ஆதரிப்பதை விடவும் எமது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகின்றபோது பிரதான வேட்பாளர்கள் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாத சூழலுக்குள் தள்ள முடியும்.

அதன் மூலம் தமிழர்களின் தேவையையும், அவசியத்தையும், ஆணையின் பேரம்பேசும் சக்தியையும் தென்னிலங்கை சக்திகளுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் நிரூபித்துக்காட்ட முடியும் என்பதே எமது இலக்காக இருக்கின்றது.

**கேள்வி:- ஆனால் தமிழ் வேட்பாளர் ஒருவருக்காக வாக்குகள் ஒருங்கிணைக்கப் படுகின்றபோது கோத்தாபய மீண்டும் வெற்றிபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுவிடுமல்லவா?**

பதில்:— உண்மையிலேயே இதுவொரு மாயையான கதையாகும். இலங்கையின் சனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ, கோத்தாபய ராஜபக்ச ஆகிய பிரதான வேட்பாளர்களுக்கு மேலதிகமாக அநுரகுமார திஸாநாயக்க, மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட 35பேர் போட்டியிடுகின்றார்கள்.

இதனால் வாக்குச் சிதறல்கள் ஏற்படுவதற்கே அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன. இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் அடிப்படையில் பார்க்கின்றபோது கூட அதிக வெற்றியைப் பெற்ற பொதுஜன பெரமுனவுக்கு குறைந்தது ஐம்பது சதவீதமான வாக்குகள் கிடைத்திருக்கவில்லை. ஆகவே அவர்களுக்கும் சரி, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான கூட்டணிக்கும் சரி, இல்லை அநுரகுமார தலைமையிலான அணியினருக்கும் சரி ஐம்பது சதவீதம் தேவையென்றால் நிச்சயமாக தீர்மானிக்கும் சக்தியாகவிருக்கும் தாயகத்தமிழ் மக்களின் வாக்குகளும் அவசியமாக இருக்கின்றன.

பெரும்பான்மைச் சமூகத்தினைச் சேர்ந்தவர்களே அதிகமாக தேர்தல் களத்தில் இருப்பதால் பெரும்பான்மைச் சமூகத்தின் வாக்குகளே சிதறப்போகின்றன. ஆகவே தமிழ்ச் சமூகம் தனது வாக்குகளை ஒருங்கிணைக்குமாயின் நிச்சயமாக தென்னிலங்கை தலைவர்கள் ஆட்டம் காண்பார்கள். இதனைவிடுத்து அரசியல் சுயலாபங்களுக்காக தமிழர் ஒருவருக்கு வாக்களித்தால் கோத்தபாய வெற்றி பெற்றுவிடுவார் என்று பொய்ப்பிரசாரம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி:- தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் வாய்திறப்பதற்கே பிரதான வேட்பாளர்கள் தயங்குவதால் திரிசங்கான நிலையொன்றல்லவா ஏற்பட்டிருக்கின்றது?**

பதில்:— தமிழர்களைப் பொறுத்தவரை இந்த சனாதிபதி தேர்தலானது 'அனுபவித்த பிசாசுக்கும், அனுபவிக்காத பேய்க்கும்' இடையே நடைபெறும் போட்டியாகவே தான் கோத்தபாயவுக்கும் சஜித்துக்கும் இடையே நடைபெறவுள்ளது. இதனைவிடவும் சிங்களப் பேரினவாத வாக்குகளை உடைக்கும் மூன்றாவது வேட்பாளராக ஜே.வி.பியின் அநுரா திசநாயகவும் விளங்கப்போகிறார்.

இந்தப் பொறிக்குள் தமிழர்களின் வாக்குகள் விழுந்து அர்த்தமற்ற பலி கடாக்களாகப் போய்விடக்கூடாது என்பதே எனது நிலைப்பாடாக உள்ளது. எமது அணுகு முறையானது சுய நிர்ணயத்தினை மையப்படுத்தியாக இருக்கச் செய்வதன் மூலம் சர்வதேச சக்திகளுடன் தமிழர்கள் பேரம்பேசும் நிலையை நாங்கள் வலுப்படுத்தலாம்.

குறிப்பாக கூறுவதானால், கோத்தபாய ராஜபக்ச சஜித் பிரேமதாச மற்றும் ஜே.வி.பியின் அநுராகுமார திசநாயக்க போன்றவர்கள் சிங்களப் பேரினவாதத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை. இவர்களுடன் தமிழர் தரப்பு பேரம் பேசவேண்டும் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

பேரம் பேசும்போது அவர்கள் தென்னிலங்கை தலைவர்கள் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. ஆகவே தான் சர்வதேச உத்தரவாதம் இல்லாமல் பேரம் பேசுவதில் உண்மையில் ஒரு பலனும் இல்லை என்ற விடயத்தினை முன்வைக்கின்றேன்.

சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுதல் என்பது தற்போதைய நிலையில் செல்லாக்காசு போன்றது. எழுதிய ஒப்பந்தங்களையே கிழித்துப் போடும் சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுவதில் பலன் ஏதும் இல்லை.

மாறாக இவர்களை இயக்கும் சர்வதேச சக்திகளுடன் தான் நாங்கள் பேரம் பேசவேண்டும். அமெரிக்காவும் இந்தியாவும் இன்று இறுக்கமாகப் பின்னிப் பிணைந்த ஓர் அணியாகச் செயற்படுகின்றன. இந்து பசிபிக் கடற் போர்முனையில் சீனாவுக்கெதிரான வியூகம் வகுப்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் ஜப்பானுடனும் அவுஸ்திரேலியாவுடனும் நான்முனைச் சக்திகளாக இணைந்திருக்கின்றன. இந்து சமுத்திரம் போர்ச் சூட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது.

2009 இல் இருந்த பூகோளப் போட்டா போட்டியை விட தற்போதைய இந்து சமுத்திரக் கேந்திர முக்கியத்துவம் பலமடங்கு வீச்சாகியிருக்கிறது. ஆகவே இந்தச் சூழலை நாம் சாணக்கியமாக பயன்படுத்தியருக்க வேண்டும். ஆனால் தவறவிடப்பட்டுள்ளது.

**கேள்வி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித்தை ஆதரிக்கும் முடிவெடுத்தமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:— இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் தங்களின் எஜமான் சார்ந்து தீர்மானம் எடுத்துள்ளார்கள். அதற்கான கண்துடைப்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தினை காண்பிக்கின்றார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் உருவான மாகாண சபைகளுக்கான சட்டங்களையே முழுமையாக தருவதற்கு தயாரில்லாத சிங்கள பௌத்த பெருந்தேசியவாதிகள் சட்ட ரீதியான வலிமையற்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவர்களா?

சட்ட மேதாவிகளாக இருக்கும் கூட்டமைப்பினர் அதனை உணராது செயற்பட்டு இருப்பார்கள் என்று எவ்வாறு கொள்ள முடியும். தமிழினம் சீர்குலைந்து அழிந்தாலும் பரவாயில்லை தானும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் சீருஞ்சிறப்புமாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கும் தலைமைகளை வைத்துக் கொண்டு ஒரு இனம் விடுதலைக்கு ஏங்குவது துரதிஸ்டவசமானதாகும். கூட்டமைப்பு முண்டு கொடுக்கும் வேட்பாளர் வெற்றி பெற்றால் தமிழ்த் தேசியம் தாயகத்திலிருந்து முழுமையாக நீக்கம் பெற்றுவிடும்.

**கேள்வி:- ஐந்து கட்சிகள் கூட்டிணைந்தபோதும் அவர்களால் ஏகோபித்த நிலைமைக்கு வரமுடியாது போனமை குறித்து உங்களின் கருத்து?**

பதில்:— தமிழ் மக்கள் பேரவையின் முயற்சியில் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது பற்றிய கலந்துரையாடலில் ஆரம்பத்தில் என்னையும், பின்னர் கிழக்கு மாகாணத்தில் உள்ள கண்மணியையும், இறுதியில் எதிர்வீரசிங்கத்தினையும் பரிசீலித்தவர்கள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில் இருந்த அண்ணன் சிவாஜி லிங்கத்தினை புறக்கணித்தார்கள். அதன் பின்னர் ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்து

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# தமிழ் தேசிய விடுதலையில் புலம்பெயர் தமிழர்களின் பங்கு

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் பேச்சாளர் ஸ்ரிபன் புஸ்பராஜா சிறப்பு நேர்காணல்**



**தங்களைப் பற்றியும் தங்கள் ஈழத்தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாடுகளையும் சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**

தாயகத்தில் வட்டுக் கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட நான், நோர்வேக்கு புலம்பெயர்ந்து வந்து மூத்த கப்பல் கட்டுமானப் பொறியியலாளராக தொழில் புரிகின்றேன். 17 வயது முதல் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் இணைந்து கடந்த 33 வருடங்களாக தமிழ்த் தேசியப் பணியில் இருக்கின்றேன். நோர்வேயின் வலதுசாரிக் கட்சியின் உறுப்பினராகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினராகவும் இருக்கின்றேன். சர்வதேச ரீதியாகச் செயற்படும் அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவையின் அதிகாரபூர்வ பேச்சாளராகவும் இருந்து அரசியல் பிரச்சார பணிகளைச் செய்து வருகின்றேன்.

**ஈழத்தமிழ் தேசியம் என்பதை எவ்வாறு வரையறுக்கலாம் என கருதுகிறீர்கள் ?**

தேசம் என்பது ஒரு மக்கள் திரள் (ஒரு தேசம் என்பது ஒரு பொதுவான மொழி, பொதுவான வாழும் பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகிய எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகம் —ஸ்டாலின்—). தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப் பிரக்ஞை அல்லது வாழ்வியல். தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மக்களினது கூட்டு வாழ்வியல் ஆகும். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களும், வடகிழக்கிற்கு வெளியே உள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களும், புலத்தில் வாழும் தமிழர்களும் தமிழ்த்தேசத்திற்குள் அடங்குவார்கள்.

**ஈழத்தமிழ் தேசியம் எங்கே, எப்போது, எப்படி தன் தனித் துவத்தையும், இறைமையையும் இழந்தது என கருதுகிறீர்கள்?**

ஆங்கிலேயர்களால் 1833ல் இலங்கை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட போதே தமிழர் தமது தாயகம், தேசியம், இறைமை, சுயநிர்ணய உரிமை, தனித்துவம் என்ற அடிப்படை உரிமைகளை பெருமளவு இழந்துவிட்டனர். ஈழத்தமிழ் தேசிய விடுதலை போராட்டம் என கூறும் போது, இயல்பாகவே ஈழத்தமிழ் தேசியம் தனது உரிமைகளை இழந்து நிற்கிறது என்பதையும் அதனை மீட்கும் போராட்ட முறைகளையும் குறிப்பிடுகிறது. இலங்கையின் அரசியலமைப்பு "சனநாயகத்தை" மையப்படுத்தி அமைவதும் "தமிழ் பேசும்" மக்கள் திட்டமிடப்பட்டே சிறு இனக்குழுமங்களாக பிரிக்கப்பட்டு சிதறிக்கிடப்பதும், புலம்பெயர்வும் அங்கு நிலைத்த பேரினவாத மேலாண்மைக்கு வழிவகுத்து நிற்கிறது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவது அவசியம். தமிழர்களது இறைமையை மீளப்பெற்றுக் கொள்ள நாம் முனைப்புடன் செயற்பட வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நா சபையின் சர்வதேச மனித உரிமைச் சாற்றுரைக்கு அமைய எல்லா மக்களுக்கும் (இனக் குழுமம்) அவர்களுக்கு உரிய குறிப்பிட்ட நிலப்பகுதியில் எந்தவொரு புறநிலை குறுக்கீடுகளும் இன்றி சுயமாக, சுதந்திரமாக தங்கள் அரசியல் நிலையையும், பொருளாதார, சமூக, கலாச்சாரத்தையும் தொடர்ந்து பேணிக்காக்க, மேம்படுத்த உள்ள உரிமை ஆகும். எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ள ஒருசில வழிமுறைகளை நாம் கையாள வேண்டும்.

அவ்வகையில் எமது இலக்கைத் தீர்மானிக்க வேண்டும். இலக்கை அடைய அரசியல் நியாயப்பாடுகளைத் தர்க்க ரீதியாகத் தொகுத்து சர்வதேச மட்டத்திலும் தாயக மட்டத்திலும் பேசுபொருளாக்க வேண்டும். மேலும் தமிழர்கள் இதை முன்னெடுப்பதற்கான ஒரு வலுவான தேசிய அரசியல் இயக்கத்தைக் (அரசியற்கட்சிகளுக்கு அப்பாற்பட்டு) கட்டியெழுப்ப வேண்டும். முரண்பாடுகள் கடந்து அக ஆற்றலையும் புற ஆற்றலையும் ஒருங்கிணைக்க வேண்டும். 2009ம் ஆண்டிற்கு பின் தமிழினம் தனது பேரம்பேசும் சக்தியை (சமவலு) இழந்து நிற்கின்றது. ஆகவே நாம் பல நட்புச் சக்திகளையும் (எமக்கு சார்பான நாடுகள்), மலையகம் இணைந்த தமிழர் தாயகம், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழகம் போன்ற தமிழ் இன சக்திகளையும் பிற போராடும் இன மக்களையும் ஒன்றிணைக்க வேண்டும். நாங்கள் ஒரு கௌரவமான சமகால பூகோள பங்காளிகளாக மாற வேண்டுமானால் பூகோள அரசியலைக் கையாளக் கற்றுக்கொள்வதோடு சர்வதேசத்தை எமக்குச் சார்பாகத் திசைதிருப்ப வேண்டும். தற்பொழுது நடைபெறும் ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க ஒரு வலுவான சர்வதேசப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். தவறும் பட்சத்தில் இருப்பதையும் இழந்துவிடுவோம்.

தமிழர் இடையே ஊன்றிப்போன அகமுரண்பாடுகளைக் களையவேண்டும். இதைச் செய்ய வேண்டுமானால் தமிழர் மத்தியில் சமூகமாற்ற அரசியலைக் கொண்டுவர முனைப்புடன் செயற்பட வேண்டும். மிகமுக்கியமாக மக்களை அரசியல் மயப்படுத்தி மக்கள் பங்கேற்பு அரசியலை முன்னெடுக்க வேண்டும். தமிழர்களுக்கான சிந்தனையாளர்கள், கோட்பாட்டாளர்கள், அரசியல் ஞானிகள் போன்றோரை இணைத்து சிந்தனைக் குழாம் ஒன்றை உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்த அதிகார மையம் போன்று அரசுக்கு நிகரான ஒரு அதிகாரமையம் உருவாக்கப்பட வேண்டும். நாளாந்தம் பறிபோகும் கிழக்கைக் கையாள தனியான மூலோபாயங்களை வகுக்கவேண்டும். தமிழ் மக்களுக்கான கட்டமைக்கப்பட்ட வலுவான நிதியம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். சீனமக்கள், யூத மக்கள் போன்று தமிழ்த்தேசியத்தை ஒரு வாழ்வு முறையாக மாற்றவேண்டும்.

**ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டங்கள் ஈழத் தமிழர்களின் பெருமளவிலான புலம் பெயர்விற்கும், உலகளாவிய ஈழத்தமிழ் தேசிய விடுதலை போராட்ட விரிவாக்கத்திற்கும் வழிகோலியதுடன், தாயகத்தில் தமிழ் தேசிய விடுதலை போராட்ட வளர்ச்சிக்கு பலம் சேர்ப்பதாக இருந்தது. இன்று இலங்கையில் தமிழ் தேசிய விடுதலை செயற்பாடுகள் பலவீனமுற்று இருக்கும் போது புலம் பெயர் தமிழர்கள் எவ்வாறு தமிழ் தேசிய விடுதலைக்கு பலம் சேர்க்க முடியும் என நினைக்கிறீர்கள்?**




முப்பது வருட விடுதலைப் போராட்டத்தை நடத்த பொருளாதாரரீதியாக உறுதுணையாக இருந்தவர்கள் புலம்பெயர் தமிழர்கள் என்பதை மறுக்கமுடியாது. 2009ம் ஆண்டு ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்பு தேசியப் போராட்டத்தை புலம்பெயர் தமிழர்களே தக்கவைத்துள்ளனர். தொடர்ச்சியாக

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# தனியன்களாகிய தமிழ்க் கட்சிகள்

என்னதான் பேச்சு நடத்தினாலும், சம்பந்தனும் சுமந்திரனும் கடைசியில் சஜித் பிரேமதாஸவுக்கே ஆதரவு அளிப்பார்கள் என்றொரு கருத்து, கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் சரி, தமிழ் அரசியல் பரப்பிலும் சரி இருந்து வந்தது. வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அந்தக் கருத்தை வலுப்படுத்தும் வகையிலேயே அமைந்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு— ஐந்து கட்சிகளின் கூட்டு என இரண்டு தளங்களில் இந்தத் தேர்தல் விவகாரம் அணுகப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில், பிரதான வேட்பாளர்களுடன் அதிகாரபூர்வமற்ற பேச்சுக்கள், சந்திப்புகள் நடத்தப்பட்டிருந்தன.



தமிழர் நிலை

அதேவேளை, தமிழ்க் கட்சிகளின் கூட்டு என்ற வகையில், 13 அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சு நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், பிரதான வேட்பாளர்கள் எவருமே அதனைக் கண்டு கொள்ளவில்லை. இந்தநிலையில், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன், திடீரென வெளி—யிட்ட அறிக்கையில், எந்தவொரு சிங்கள வேட்பாளரையும் ஆதரிக்குமாறு கை நீட்ட முடியாது என்று கூறியிருந்தார்.

அதற்குப் பின்னர், ஐந்து கட்சிகளும் இணைந்து நடத்திய கூட்டத்தில் தபால் மூல வாக்களிப்பில், விரும்பிய வேட்பாளருக்கு கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன. இதற்குப் பின்னரே சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை வெளியானது. அதிலுள்ள அம்சங்களை ஆராய்ந்து பின்னர், வவுனியாவில் நடந்த மத்திய குழுக் கூட்டத்தில், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிக்கும் முடிவை தமிழரசுக் கட்சி எடுத்திருப்பதாக சுமந்திரன் அறிவித்திருந்தார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவுடன் கலந்துரையாடாமலேயே தமிழரசுக் கட்சி இந்த முடிவை அறிவித்திருந்தது. அடுத்த சில நாட்களில், பங்காளிக் கட்சிகளுடன் ஆலோசித்து விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவை இரா.சம்பந்தன் வெளியிடுவார் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார். ஆயினும், அந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாகவே, புளொட்டும், ரெலோவும் தனித்தனியாக ஆலோசனை நடத்தி விட்டு தமது முடிவை அறிவித்தனர்.

அதன் பின்னர் தான், கூட்டமைப்பின் சார்பில் அன்னம் சின்னத்தில் போட்டியிடும், சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு கோரும் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டு என இருவேறு அரசியல் வேலைத் திட்டங்களில் ஒன்றாகப் பயணித்திருந்த போதும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் முடிவுகளை தனித்தனியாகவே எடுக்கத் துணிந்திருக்கின்றன. இதற்கு முன்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவும், சில சந்தர்ப்பங்களில், தமது தலைமைக் குழுவைக் கூட்டி சில அதிரடியான முடிவுகளை எடுத்து அறிவித்தது. அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு — குறிப்பாக தமிழரசுக் கட்சிக்கு அழுத்தங்களைக் கொடுக்கவும் முற்பட்டிருந்தது.

**கபில்**

இப்போது, தமிழரசுக் கட்சி முந்திக் கொண்டு, ரெலோவையும், புளொட்டையும் தன்வழிக்கு இழுத்திருக்கிறது. இது தவறான முன்னுதாரணம் என்பதில் சந்தேகமில்லை. அதுபோலத் தான், ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டில், கையெழுத்திட்ட தமிழ் மக்கள் கூட்டணியும் முந்திக் கொண்டு தமது முடிவை அறிவித்து குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஒரே இலக்குடன், ஒரே நோக்குடன், பயணிக்கும் தமிழ்க் கட்சிகளை ஒன்றாகப் பயணிக்க வைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், அவை தனித்தனியாக சிந்திக்கவும் தனித்தனியான முடிவுகளை எடுக்கவுமே முற்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் வாக்குகளை ஒருங்கிணைத்து, பலமான ஒரு திரட்சியாக அதனை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்துக்கு முரணான வகையிலேயே தமிழ்க்கட்சிகள் செயற்படத் தொடங்கி—யிருக்கின்றன. தமிழரசுக் கட்சி திடீரென சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க எடுத்த முடிவுக்கு சொல்லப்படுகின்ற வெளிப்படையான காரணம், அவரது தேர்தல் அறிக்கை தான்.

தமிழரசுக் கட்சி உள்ளிட்ட 5 தமிழ்க்கட்சிகள் இணைந்து முன்வைத்த, 13 அம்ச கோரிக்கைகளுடன், இரண்டு பிரதான வேட்பாளர்களுமே பேச்சு நடத்த முன்வரவில்லை. கோத்தபாய ராஜபக்ச இந்த நிபந்தனைகளை நிராகரித்ததுடன், இவ்வாறான கோரிக்கைகளுடன் பேச வருபவர்களை சந்திக்கமாட்டேன் என்றும் அறிவித்தார். அதுமாத்திரமன்றி தமிழ்க்கட்சிகளை அடிப்படைவாதக் கட்சிகள் என்றும் அடையாளப்படுத்தி, நாட்டின் பாதுகாப்புக் கருதி அவற்றைச் சந்திக்க மறுத்து விட்டதாகவும், தெற்கில் பிரசாரம் செய்து வருகிறார். தமிழ் மக்களின் கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும், அடிப்படைவாதமாக அடையாளப்படுத்தும், கோத்தபாய ராஜபக்ச, ஒரு பக்கத்தில் இருக்க, இன்னொரு பக்கத்தில் தமது தேர்தல் அறிக்கையை மிகவும் தாமதமாகவே வெளியிட்டார் சஜித் பிரேமதாஸ.

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை ஒப்பீட்டளவில் தமிழ் மக்களுக்கு சாதகமானதாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. இயல்பாகவே ஐ.தே.க வெறுப்பைக் கொண்டுள்ள, கோத்தா ஆதரவு மனப்பாங்கில் உள்ள தமிழ் அரசியல் விமர்சகர்களும், சில அரசியல் வாதிகளும், கூட, சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையிலுள்ள சாதகமான விடயங்களை நிராகரிக்கத் தயாரில்லை.

அவர்கள், இது சாத்திய மற்றது, சனாதிபதியின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கோணத்தில் தான், இந்த தேர்தல் அறிக்கையை நிராகரிக்க முற்பட்டிருக்கிறார்களே தவிர, இதனை தரம்குறைந்ததாக அவர்களால் குறிப்பிட முடியாதிருக்கிறது.

தமிழ்க்கட்சிகள் முன்வைத்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ள 13 கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளில், பெரும்பாலானவற்றுக்கு, இந்த தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அல்லது தீர்வு காணப்படும் என்று கூறப்பட்டுள்ளது என்பது சில மூத்த தமிழ் ஊடகவியலாளர்களின் கருத்து. எனினும், தற்போது கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு அளிக்கும், வடமாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா போன்றவர்கள், தமிழ்க்கட்சிகளின் பெரும்பாலான கோரிக்கைகளை இந்த தேர்தல் அறிக்கை நிராகரித்துள்ளதாக கூறியிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்கும், சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக்கும் இடையில் ஒரு முக்கியமான வேறுபாடு இருந்தது. கோத்தபாய ராஜபக்ச 500 துறைசார் வல்லுநர்களைக் கொண்ட குழுவின் மூலம், வாக்குறுதிகளை அறிவிக்க முனைந்தாரே தவிர, தமிழ் மக்களின் கோரிக்கைகளையோ, அவர்களின் நிலைப்பாடுகளையோ கருத்தில் கொள்ளவில்லை. கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்க முனைந்த எந்த தமிழ்க்கட்சியும் திர்க்கமான எந்த வாக்குறுதியையும் அவரிடம் இருந்து பெற முனையவில்லை.

அவர் அளித்துள்ள ஒரே ஒரு வாக்குறுதி 274 முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யப்படுவார்கள் என்பது மாத்திரம் தான். ஆனால், சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையில், தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள், நிலைப்பாடுகளையும் உள்வாங்க முற்பட்டிருந்தார். அவர் தமிழ்க்கட்சிகளுடன் பேசி இணக்கத்தை ஏற்படுத்துவதற்குப்

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# டிராகனின் தலையில் தாமரை மொட்டு

மு .திருநாவுக்கரசு

"இறைமை, சிங்கள நாடு" இதுவே தாமரை மொட்டின் கொள்கையும், கோட்பாடும் தேர்தல் கோசமுமாகும். இலங்கையின் தேர்தல் அரங்கில் தூணேறிய சிங்கம் — டிராகன் — கழுகு என்பன களமாடுகின்றன. நெருப்பை சுவாசிக்கும் டிராகன் இலங்கையின் அரசியல் தடாகத்திலுள்ள தாமரை மொட்டைச் சூட விரும்புகிறது. அதனைத் தடுத்து நிறுத்த தூணேறிய சிங்கமும், கழுகும் அன்னத்தின் பின்னால் நிலை எடுக்கின்றன. இது ஒன்றும் பஞ்சதந்திரக் கதையல்ல; இலங்கை அரசியலின் உண்மையான நிலை இதுதான்.

கார்த்திகைப் பூவை வாளேந்திய சிங்கம் வெட்டி வீழ்த்திய பின்பு அந்த சிங்கத்தின் எஜமான்கள் தற்போது தாமரை மொட்டைக் கையிலெடுத்து நெருப்பை சுவாசிக்கும் டிராகனின் தலையிற் சூடி இலங்கை அரசியல் அரங்கில் சாகசம் புரிய முயற்சிக்கின்றார்கள்.



கார்த்திகைப் பூவை வாளேந்தி வெட்டி வீழ்த்தியவர்கள் இப்போது தாமரைப் பூவேந்தி அரசியற் சாகசம் புரியப் புறப்பட்டுள்ளார்கள். தாமரை மொட்டை அன்னப்பறவையால் கொத்தி விழுங்க முடியுமென தமிழரசுக் கட்சி நம்புகிறது. அதேவேளை தாமரைப் மொட்டைப் புடைசூழ்ந்து பௌத்த மகா சங்கமும், இராணுவமும் , நெருப்பை சுவாசிக்கும் டிராகனும் பலமாக நிலையெடுத்துள்ளன என்பதும் கவனத்துக்குரியது. தற்போதைய தேர்தல் இடாப்பின்படி ஒரு கோடியே 60 லட்சம் வாக்காளர்கள் பதிவாகியுள்ளனர்.

2015ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலில் 81% இற்கு மேல் வாக்களிக்கப்பட்டதனால் அதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் சுமாராக 82 % வாக்காளர்கள் வாக்களிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது இத்தேர்தலில் சுமாராக ஒரு கோடியே 31 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கக் கூடும் என கணிக்கலாம். அப்படியாயின் 65 இலட்சத்திற்கும் 66 இலட்சத்துக்கும் இடைப்பட்ட வாக்குகளைப் பெறக்கூடிய ஒரு வேட்பாளர் சனாதிபதியாகத் தெரிவாக முடியும்.

2018 ஆம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் நிகழ்ந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் போது சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 40.47 % வாக்குகள் கிடைத்தன. அதேவேளை தற்போது தாமரை மொட்டுடன் தோழமை பூண்டுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அப்போது 12.10% வாக்குகள் கிடைத்தன. இதன்படி தற்போது 52.57% வாக்குகளைப் பெறலாம் என்பதற்கான முதலாவது ஏதுநிலை உண்டு.

அதேவேளை இறுதியாக கடந்த அக்டோபர் மாதம் 10 திகதி நிகழ்ந்த எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலின் போது மொட்டு சின்னத்தின் கீழான சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 57 % வாக்குகள் கிடைத்துள்ளன. சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 12% வாக்குகள் கிடைத்துள்ளன.

இதன்படி தனிச்சிங்கள வாக்குகளில் மொத்தம் 69% வீதமான வாக்குகளை மேற்படி இரு கட்சிகளாலும் இணைந்து பெறமுடிந்துள்ளது. இதனை நாடுதழுவிய மொத்த வாக்குகளினோடு பொருத்திப் பார்க்கையில் இது 52 % வீதத்திற்கு மேலான வாக்குகளை காட்டுகிறது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் சிங்கள மக்கள் சுமாராக 75% ஆவார். எனவே அளிக்கப்படக்கூடிய மொத்த வாக்குகளில் 98 லட்சத்துக்கு மேல் சிங்கள மக்களின் வாக்குகள் மட்டும் அமைய முடியும்.

இதன்படி சிங்கள மக்கள் மத்தியில் மட்டும் 52% வாக்குகளை மேற்படி கணக்கின்படி தாமரை மொட்டால் நிலைநாட்ட முடிந்தால் அவர்களால் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மட்டும் 68 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற முடியும். இதன்படி சனாதிபதியாகுவதற்கு தேவையான மொத்த வாக்குகளின் தொகையில் சுமாராக இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை அவர்களால் பெறமுடியும் என்பதும் ஒரு கணிப்பு. அளிக்கப்படக்கூடிய ஈழத் தமிழர்களின் மொத்த வாக்குகள் சுமாராக 14 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேல்.

அவ்வாறே அளிக்கப்படக்கூடிய முஸ்லீம் மக்களின் மொத்த வாக்குகள் சுமாராக 12 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேல். அதேபோல் அளிக்கப்படக்கூடிய மலையக மக்களின் மொத்த வாக்குகள் சுமாராக 5 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேல். இங்கு முஸ்லிம்களின் மொத்த வாக்குகளில் 6 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேல் தென் இலங்கையிலும் சுமார் 6 லட்சம் வரை கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலும் உள்ளன. தென் இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிங்கள மக்கள் தொகையுடன் கலந்து பின்னிப்பிணைந்தும், அவர்களில் தங்கியும் வாழ்பவர்கள்.

அவர்களின் வர்த்தகமும், வியாபாரமும் பெரிதும் சிங்கள மக்கள் தொகையின் மீதே தங்கியுள்ளது. இவ்வாண்டு நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தாக்குதல்களின் பின்னணியில் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் வெடித்திருந்தன. இந்நிலையில் கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முஸ்லிம் மக்களின் வாக்குகள் ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக அளிக்கப்பட்டது போல் இம்முறை அமைவது கடினம். தமது சொந்த பாதுகாப்பை கருதி இருபெரும் கட்சிகளில் ஒன்றை மட்டும் சாராது இரு கட்சிகளுக்கும் சரிக்கு சரி வாக்களிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் முஸ்லீம் மக்களுக்கு உண்டு.

எனவே தென்பகுதியில் வாழும் முஸ்லிம்களிடமிருந்து சுமாராக மூன்று லட்சம் வாக்குகளாவது கோத்தபாயவுக்கு கிடைக்க வாய்ப்புண்டு. கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு உண்டு. ஆதலால் கிழக்கில் நிலை வேறு. எப்படியோ கிழக்கிலும் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து ராஜபக்சக்களுக்கு ஒரு குறைந்தபட்ச வாக்குகளாவது நிச்சயம் கிடைக்கும்.

குத்துமதிப்பாக கூறுமிடத்து முஸ்லிம் மக்களின் 12 லட்சத்து 50 ஆயிரம் வாக்குகளில் இருந்து மூன்றில் ஒரு பங்கு வாக்குகளாவது ராஜபக்சக்களுக்கு கிடைக்க முடியும் என்று கணித்தால் நான்கு லட்சம் வரையிலான வாக்குகளை ராஜபக்சக்கள் பெறமுடியும். தென்னிலங்கை தவிர்ந்த வடக்கு கிழக்கிலுள்ள ஈழத்தமிழர்களின் வாக்குகளில் ஒரு இலட்சத்திற்கும், ஒன்றரை லட்சத்திற்கும் இடையிலான வாக்குகளை ராஜபக்சக்கள் பெறக்கூடிய ஏதுநிலை உண்டு. அதேவேளை மலையக மக்கள் மத்தியில் இருந்தது சுமாராக 1 லட்சம் வாக்குகளையாவது ராஜபக்சக்களால் பெறமுடியும் என்று கூறப்படுகிறது.

இவை அனைத்தையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது சுமாராக 74 லட்சத்திற்கும் குறையாதளவு வாக்குகளை (56.5%) ராஜபக்சக்களால் பெறமுடியும் என்ற அபாயகரமான புள்ளிவிவரம் கண்முன் தோன்றுகிறது.

பொதுவாக ஜே.வி.பி கட்சியானது சிங்களமக்கள் மத்தியிலுள்ள "கரவா" சாதிச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது என்ற கணிப்புண்டு. நாட்டின் மொத்த சனத்தொகையில் சிங்கள "கரவா" சமூகத்தின் மக்கள் தொகை 10%. இதற்கிணங்க அளிக்கப் படக்கூடிய "கரவா" சமூகத்தின் மொத்த வாக்குகள் 13 இலட்சத்திற்கு மேல். ஆனால் இதில் கத்தோலிக்க "கரவா" சமூகத்தினரின் தொகை 5 லட்சம் வரை என்று கூறப்படுவதால் அவர்கள் அனேகமாக ஐதேகவுக்கு வாக்களிப்பார்கள் என்ற கணிப்பு உண்டு.

இதன்படி மிச்சமுள்ள பௌத்த சிங்கள கரவா சமூகத்தின் எட்டு லட்சம் வாக்குகளில் பெருமளவு வாக்குகள் ஜேவிபியை சென்றடையும் என்று கருதப்படுகிறது. அத்துடன் கடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஜேவிபி சுமாராக 7 லட்சத்து 11 ஆயிரம் வாக்குகளை பெற்றிருந்தது. அதன்படி சிங்கள மக்கள் மத்தியில் உள்ள புதுமை விரும்பும் இளைஞர்கள் மத்தியில் சாதி கடந்து வாக்களிக்க கூடிய ஒரு லட்சத்துக்கு குறையாத இளைஞர்களின் வாக்குகள் ஜேவிபிக்கு கிடைக்க வாய்ப்புண்டு என்பதும் இங்கு கவனத்துக்குரியது.

எது எப்படியோ சுமாராக ஏழரை லட்சத்திற்கு குறையாத வாக்குகளைப் பெறக்கூடியதற்கான அடிப்படை வாக்கு வங்கி ஜேவிபிக்கு உண்டு. இங்கு ஜேவிபியுடைய இரண்டாவது விருப்பத் தேர்வு வாக்குகள் அளிக்கப்படுமா இல்லையா என்ற வாதம் ஒருபுறமிருக்க., மக்கள் விரும்பினால் இரண்டாவது வாக்கை தாம் விரும்பும் வேட்பாளருக்கு அளிக்கலாம் என்று ஜேவிபி கூறுவதாக இன்னொரு செய்தியும் வெளியாகியுள்ள நிலையில் இந்த இரண்டாவது வாக்கு யாருக்கு அளிக்கப்படும் என்பதிலேயே இதன் தாக்கம் பற்றிய அளவு தங்கியுள்ளது.

அத்துடன் ராஜபக்சக்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி உள்ள சந்திரிக்கா பண்டாரநாயக்கவினால் சுதந்திரக் கட்சி—யிலிருந்து எவ்வளவு வாக்கை பிரித்து சஜித் பிரேமதாசவின் வாக்குப் பெட்டிக்குள் சேர்க்க முடியும் என்பதும் கணித்திடக் கடினமான இன்னொரு பிரச்சினையாகும்.

மேலும் சஜித் பிரேமதாஸவிற்கு தமிழரசுக் கட்சி வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ளதை ஆதாரமாகக் கொண்டு தெற்கில் தீவிர பௌத்த சிங்களப்

**தொடர்ச்சி 11ம் பக்கம்..**

# மாற்றமடையுமா களநிலை? வெற்றிபெறப்போவது யார்?

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஆறு நாட்கள் மட்டுமே உள்ள நிலைமையில் இதில் வெற்றி பெற போவது யார் என்பது குறித்து முரண்பாடான மதிப்பீடுகள் வெளிவருகின்றது. கோத்தபாய ராஜபக்சவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகளவில் இருப்பதாக ஆரம்பத்தில் தகவல்கள் வெளியாகின. கடந்த கால தேர்தல் முடிவுகளின் அடிப்படையிலான மதிப்பீடுகளே அவை. இப்போது சஜித்துக்கு ஆதரவு அதிகரித்து வருவதாக சில உள்ளூர்த் தகவல்கள் சொல்கின்றன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பிந்திய தகவல் ஒன்று கோத்தா சுமார் 52 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவார் எனத் தெரிவிக்கின்றது. கொழும்பு பல்கலைக்கழகம் மேற்கொண்ட மற்றொரு ஆய்வும் பெருமளவுக்கு இதனையொத்த பெறுபேறுகளைத்தான் தந்திருக்கின்றது. இந்த நிலையில், முடிவுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்த ஒரு கள நிலை ஆய்வை இநத வாரம் பார்ப்போம்.

முடிவுகள் அமையும் என்பதை மதிப் பிடுவதற்கு கடந்த (2018) பெப்ர வரியில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகள் ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. இந்தத் தேர்தலின் போதுதான் முதன்முறையாக பொதுசன பெரமுனை களம் இறங்கியிருந்தது. கணிசமான வெற்றியையும் பெற்றது.

இதில் பொது சன பெரமுனை சுமார் 49 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. அது 44.65 வீதமாகும். ஐக்கிய தேசியக் கட்சி சுமார் 36 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. அது 32.62 வீதமாகும். சுதந்திரக் கட்சித் தரப்பு சுமார் 14 இலட்சம் வாக்குகளையும், ஜே.வி.பி. சுமார் 7 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகள் 3 இலட்சத்து 40 ஆயிரம்.

இறுதியாக நடைபெற்ற தேர்தல் என்பதால், இதனை அடிப்படையாகக் கொண்டே சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதற்கான மதிப்பீடுகள் முன்வைக்கப்படுகின்றன. பொது சன பெரமுனையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன இப்போது இணைந்துள்ளன. இதன்அடிப்படையில் அவர்கள் வசம் தற்போது (49+14) குறைந்த பட்சம் 62 இலட்சம் வாக்குகள் இருப்பதாக மதிப்பிடப்படுகின்றது. அதனால், கோத்தபாயவுக்கு 62 இலட்சம் வாக்குகள் கிடைக்கும் என்பது என்பது ஒரு கணிப்பீடு. சஜித்தின் வசம், ஐ.தே.க.. பெற்றுக்கொண்ட 36 இலட்சம் வாக்கு களுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்ட 3 இலட்சம் சொச்சம் வாக்குகளும் மட்டும்தான் இருக்கின்றது. அதாவது சுமார் 40 இலட்சம். அதனைவிட, சந்திரிகா குமாரதுங்க உட்பட சிறிலங்கா சுதந்திக் கட்சியைச் சேர்ந்த சிலர் சஜித்துக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பதால் மேலும் சில இலட்சங்கள் உயரலாம். ஆனால், ராஜபக்சக்கள் வசம் உள்ளது 62 இலட்சம் என்ற இலக்கை அடைவது சாத்தியமா?

சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரையில் வெற்றிபெற வேண்டுமானால், தன்னிடம் இருக்கக்கூடிய இந்த 45 இலட்சம் வாக்குகளை சுமார் 60 இலட்சமாகவாவது உயர்த்திக்கொள்ள வேண்டும். இது அவர் எதிர்கொள்ளும் கடுமையான சவால். சஜித்தும் அவரது குழுவினரும் இதற்காகத்தான் கடுமையாக உழைக்கின்றார்கள்.

**பூமிகன்**

சிறுபான்மையினருடைய வாக்குகள் முழுமையாக தனக்கு கிடைக்கும் என சஜித் நம்புகின்றார். மலையகம், வடக்கு, கிழக்கு மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்கள் முழுமையாக அவருக்கான ஆதரவைத் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். இவர்களுடைய வாக்களிப்பு விகிதத்தை அதிகரிக்க வேண்டும். சிறுபான்மையினர் சுமார் 90 வீதமாவது வாக்களித்தால் தனக் கான வெற்றிவாய்ப்பு அதிகமாகும் என சஜித் நம்புகின்றார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவசரமாக அறிக்கை வெளியிட்டதுகூட, பரப்புரைகளை முன்னெடுத்து வாக்களிப்பு விகிதத்தை அதிகரிக்கச் செய்வதற்காகத்தான் எனச் சொல்லப்படுகின்றது. வடக்கு கிழக்கில் சஜித்துக்கான ஆதரவு அதிகளவுக்கு உள்ளது என்பது உண்மை. கூட்டமைப்பு சொல்வதால்தான் அவர்கள் சஜித்தை ஆதரிப்பார்கள் எனச் சொல்ல முடியாது. ஆனால், வாக்களிக்காமல் வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் பழக்கம் அவர்களிடம் உள்ளது. அவர்களை அதிகளவுக்கு வெளியே வரச் செய்து வாக்களிப்பை அதிகரிக்காவிட்டால், கோத்தா வெற்றி பெறுவதற்கு வழி அமைத்துக்கொடுத்துவிடும் என சஜித் தரப்பு கருதுகின்றது. கூட்டமைப்பின் ஆதரவும், அவர்கள் முன்னெடுக்கும் பரப்புரைகளும் அதற்கு உதவும் என்பது சஜித்தின் நம்பிக்கை.

இதனைவிட சஜித்துக்கு சாதகமான மேலும் சில விடயங்கள் உள்ளன. சஜித் சாதாரண மக்களின் பிரதிநிதியாகப் பார்க்கப்படுபவர். அடிமட்ட மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காக உழைப்பவர். அதனால் அடிமட்ட சிங்கள மக்கள் ரணிலைவிட சஜித்தை விரும்புகின்றார்கள். அவரது தந்தை ரணசிங்க பிரேமதாசவும் இவ்வாறுதான் செயற்பட்டவர். தேர்தல் பரப்புரைகளில் தனது தந்தையையும் சஜித் பெருமளவுக்கு நினைவுபடுத்துகின்றார். இதுவும் சஜித்துக்கான வாக்கு வங்கியை அதிகரிக்கும்.

கடந்த தேர்தல்களின்போது, போர் வெற்றி என்பது ராஜபக்சக்களால் சிங்கள மக்களுடைய வாக்குகளைக் கவர்ந்திழுப்பதற்கான ஒரு கருவியாக இருந்தது. ஆனால், சஜித் போட்டியிடுவதும், சரத் பொன்சேகாவை அவர் களமிறக்கியிருப்பதும் அந்த நிலைமைகளில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. சிங்கள மக்களைக் கவரக்கூடிய ஒரு பேச்சாளராக அவர் தன்னை முன்னிறுத்திவருகின்றார். மிதக்கும் வாக்குகள் எனக் குறிப்பிடப்படும் வாக்குகளில் கணிசமான தொகையை இதன் மூலம் அவர் கவர்ந்திழுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்சவின் உரைகள் சிங்கள மக்கள் மத்தியில் பெருமளவுக்குச் செல்வாக்குச் செலுத்தவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. அவரது தடுமாற்றமும், கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் அவர் குழம்புவதும் ஊடகங்களில் கேலியாகப் பேசப்படுகின்றது. இதனை அடிப்படையாக வைத்துத்தான் கோத்தாவை நேரடி விவாதம் ஒன்றுக்கு வருமாறு தொடர்ச்சியாக சஜித் அழைத்துக்கொண்டிருந்தார். இது போன்ற சம்பவங்கள் சஜித்துக்கான ஆதரவுத் தளத்தை உயர்த்தியிருக்கின்றது. கோத்தாவின் ஆதரவில் வீழ்ச்சி ஒன்றும் காணப்படுகின்றது. இந்த நிலைமைகளில் மேலும் தாக்கத்தைக் கொடுக்கும் வகையில் சந்திரிகாவின் நகர்வுகளும் அமைந் திருக்கின்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உருவாகியிருந்த குழப்பமான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு நிதானமாகக் காய்நகர்த்தியிருக்கின்றார் சந்திரிகா குமாரதுங்க. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் தெளிவான பிளவைக் காணமுடிந்தது. ஒரு தரப்பினர் ராஜபக்ச தரப்பினருடன் இணைய முனைந்தார்கள். மற்றொரு தரப்பினர் ஐ.தே.க.வுடன் இணைய, மூன்றாவது தரப்பினர் சுதந்திரக் கட்சியின் அடையாளத்தைப் பேணிக் கொள்ள முனைந்தனர். இந்த மூன்றாவது தரப்பினருக்குத்தான் சந்திரிகா தலைமையைக் கொடுக்க முற்பட்டுள்ளார்.

‘அப்பி சிறீலங்கா’ என்ற பெயரில் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க முற்படுபவர்களுக்கான மாநாடு ஒன்றை அவர் கொழும்பில் நடத்தினார். இதில் சுமார் 70,000 பேர் வரையில் கலந்துகொண்டதாக செய்திகள் தெரிவித்தன. சஜித் பிரேமதாச தமது ஆதரவுக் கட்சிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்விலும் சந்திரிகா கலந்துகொண்டிருந்தார். கோத்தா தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றார். சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களும் அவருடன் இணைந்திருக்கின்றார்கள். சந்திரிகாவின் இந்த அதிரடி நகர்வுகள் ராஜபக்சக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. சந்திரிகாவின் செயற்பாட்டினால் பல இலட்சம் வாக்குகள் திசை மாறும் எனக் கூறமுடியாவிட்டாலும், கோத்தாவின் வாக்கு வங்கியிலிருந்து சில இலட்சம் வாக்குகளாவது சஜித்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தீவிரமான சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களும், ராஜபக்சக்கள் தரப்பில் அதிருப்தியடைந்திருப்பவர்களுக்கும் சந்திரிகாவின் இந்த அதிரடி உற்சாகத்தைக் கொடுத்திருக்கின்றது.

கடந்த இரண்டு — மூன்று வாரங்களில் சஜித்துக்கான ஆதரவு அதிகரித்திருப்பதை பிராந்திய ரீதியாகக் கிடைக்கும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. தன்னிடம் ஏற்கனவே உள்ள வாக்கு வங்கியில் மேலதிகமாக 10 இலட்சத்துக்கும் குறையாத வாக்குகளை சஜித் அறுவடை செய்தால் மட்டும் அவரால் வெற்றிபெற முடியும். இதற்காக அவர் தரப்பு கடுமையாக உழைக்கின்றது. அதில் அவர்களால் வெற்றிபெற முடியுமா என்பதை அறிய இன்னும் சரியாக ஒருவாரம் பொறுத்திருக்க வேண்டும்.

6ம் பக்கத் தொடர்ச்சி... தனியன்களாகிய

பதிலாக, தேர்தல் அறிக்கையில் பெரும் பாலான கோரிக்கைகளுக்கு சாதகமான பதில்களை அளிக்க முனைந்திருந்தார். இதற்கு கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் உதவினார் என்று பேச்சுக்களும் உள்ளன. எவ்வாறாயினும், சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் முழுமையாக இல்லாவிட்டாலும், பெரும்பாலானவற்றுக்கு ஏதோ ஒரு பதில் அல்லது வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுமா— இல்லையா என்ற கேள்விகள் உள்ளன. எந்தவொரு வேட்பாளரினதும் வாக்குறுதிகள் நிறை வேற்றப்படுமா என்பதை காலம் தான் பதிலளிக்க வேண்டும்.

அந்தக் கேள்விக்கான விடையில் இருந்து ஆதரவளிப்பதானால், எதிர்காலத்தை உணர்ந்த ஒருவரால் தான் அதுபற்றி முடிவெடுக்க முடியும். சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையின் சாதகத் தன்மைகளை கொண்டு அவருக்கு ஆதரவளிக்க முடிவு செய்துள்ளதாக தமிழ் அரசுக் கட்சி அறி—வித்துள்ள போதும், இந்த முடிவுக்குப் பின்னால், மற்றொரு காரணம் இருக்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் இயல்பாகவே உள்ள கோத்தா வெறுப்பலை, ராஜபக்ச எதிர்ப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையில், இந்த தேர்தலில் தமிழ் மக்களின் முடிவு, சஜித் பிரேமதாஸவுக்கு சாதகமானதாக உள்ளது. இதனை சஜித் ஆதரவு அலை என்று எடுத்துக் கொள்ள முடியாவிடினும், கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்தும் ஒரு உத்தியாக தமிழ் மக்கள் சஜித்துக்கான வாக்குகளை அளிக்கும் சாத்தியங்கள் உள்ளன. இவ்வாறானதொரு நிலையில், அதற்கு மாறான தீர்மானம் ஒன்றை அறிவித்து மூக்குடைபடுவதை தவிர்த்துக் கொள்வதற்கு தமிழரசுக் கட்சி முற்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் முடிவில் முக்கியமான ஆதிக்கம் செலுத்தியது இந்தக் காரணம் தான். தமிழ் மக்களை விரும்பிய வேட்பாளருக்கு ஆதரவு அளிக்குமாறு கோருவதானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களால் அளிக்கப்பட்ட தலைமைத்துவப் பொறுப்பை தட்டிக்கழிக்கிறது என்ற குற்றச்சாட்டை ஏற்படுத்தும். எனவே, ஒரு சார்பு நிலையை எடுக்க வேண்டியது அவசியமானதாக உணரப்பட்டிருக்கிறது. அதேவேளை, இன்னொரு பக்கத்தில், தாங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் — அதனால் தோல்வியடைந்து விடக்கூடும் என்பதையும் ஆராய்ந்தே முடிவெடுப்போம் என்று சுமந்திரன் முன்னர் கூறியிருந்தார். சி.வி.விக்னேஸ்வரனும் தமது அறிவிப்பை நியாயப்படுத்திய போது அவ்வாறான கருத்தை வெளியிட்டார். ஆனாலும், அதனையும் மீறி சஜித்துக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவானது, தமிழ் மக்களில் பெரும்பாலானோரின் கருத்துடன் உடன்பட்டதாகவே இருக்கக் கூடும். இது அரசியல் ரீதியாக எந்தளவுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றோ, சாதகமானது என்றோ இப்போதைக்குக் கூற முடியாது. தேர்தல் முடிவைப் பொறுத்தே அது தீர்மானிக்கப்படும்.

6ம் பக்கத் தொடர்ச்சி... டிராகனின்

பேரலையை ராஜபக்சக்கள் தட்டியெழுப்பத் தொடங்கியுள்ளனர். இப்பின்னணியில் சஜித் பிரேமதாசாவுக்கான தமிழரசுக் கட்சியின் ஆதரவு "வரமா, சாபமா" என்ற கேள்வி பெரிதாக உண்டு. எது எப்படியோ ஒட்டு மொத்த பௌத்த சிங்கள மகாவம்ச மனோநிலையின் பின்னணியில் பௌத்த மகா சங்கம், இராணுவம், டிராகன் என்பன வற்றால் புடைசூழப்பட்ட சூழலில் தாமரை மொட்டுக்கு அண்மைக் காலங்களில் கிடைத்திருக்கக் கூடிய தேர்தல் புள்ளி விபரங்களும் இணைந்து தாமரை மொட்டை தூக்கலாக வைத்துள்ளன என்பது மட்டும் தெரிகிறது.

7ம் பக்கத் தொடர்ச்சி... தமிழ்த்தேசிய

நடைபெறும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிற்கு சர்வதேசரீதியாக குரல் கொடுத்தும் வருகின்றனர். ஐநா சபையிலும் சர்வதேசத்திலும் ஈழத்தமிழர் இனப்பிரச்சனையை பேசுபொருளாக வைத்திருக்கும் பொறுப்பும், இனவழிப்பு, போர்க்குற்றங்கள், பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களிலும் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பானது முக்கியமானதாக அமைந்தது. பின்வரும் விடயங்களில் புலம்பெயர் தமிழர்கள் கவனம் செலுத்தி எமது தேசிய விடுதலைக்கு மேலும் பலம் சேர்க்க முடியும்.

இதற்காக களநிலவரங்களை அறிந்து செயற்படத் தாயகத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பைப் பேணவேண்டும். தமிழ்த்தேசிய அரசியலின் வெளிப்பலத்தை புலம்பெயர் தமிழர்கள் உருவாக்க வேண்டும். பூகோள அரசியலின் நகர்வுகளை உணர்ந்து காலத்திற்கு ஏற்ப நிபுணத்துவ ஆலோசனைகளை தாயகத்திற்கு வழங்கவேண்டும்.

உலக நாட்டு அரசுகள், ஐநா சபை, ஐரோப்பிய ஒன்றியம், அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் தொடர்சியான தொடர்பாடலூடாகப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். பிரதானமாக எமது தேசியப்போராட்ட நியாயத்தை உலகநாடுகளெங்கும் பரப்ப வேண்டும். தமிழர்கள் வாழும் நாடுகளில் அரசியல் பங்குபற்றல் ஊடாக எம் போராட்டத்திற்கு வலுசேர்ப்பதுடன் அந்தந்த நாட்டு அரசியல் கட்சிகளுக்குள் எமது பிரதிநிதிகளையும் நியமிக்க வேண்டும். எமது மொழி கலை கலாச்சாரம் பண்பாடுகளை பேணி தமிழ் சமூகமாக தனித்துவம் காக்க வேண்டும்.

தாயகத்தில் மேற்கொள்ள முடியாத விடயங்களை புலத்திலிருந்து செய்ய முயற்சிக்க வேண்டும். யுத்த வடுக்கள், வாழும் சாட்சிகள் என்பன அழியமுதல் புலத்தில் அருங்காட்சியகம் போன்ற விடயங்களை உருவாக்க வேண்டும். எமது வரலாறு சிதைவடையாது இருக்க ஆவனசெய்ய வேண்டும். புலத்தில் அடுத்த தலைமுறையை தமிழ் அடையாளத்துடன் வளர்க்க வேண்டும். இரு கலாச்சாரச் சூழலில் வாழும் இளையோரின் சமநிலை பேணப்பட வேண்டும்.

இந்துமா சமுத்திரப் பகுதியில் மையம் கொண்டுள்ள பூகோள அரசியலைக் கருத்தில்கொண்டு புலம்பெயர் தமிழர்கள் புது அரசியல் வியூகங்களை வகுக்கவேண்டும். சீனா, இந்தியாவுடன் பேசிப்பார்க முயற்சிகள் எடுக்கவேண்டும். சர்வதேச மட்டத்தில் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இனவழிப்புக்கு நீதிகோரும் புதுப்புது வழிகளை ஆராய்ந்து அதற்கான இலக்கை நோக்கி தளராது நகரவேண்டும். ஐநா பொதுச்சபை, பாதுகாப்புச்சபை நோக்கிய வேலைத்திட்டங்கள் மேலும் வேகப்படுத்தப்பட வேண்டும்.

2009ம் ஆண்டுக்குப் பின்னர் எம்மை ஆண்ட எமது ஆதரவை பெற்ற தமிழீழ நிழல் அரசை இழந்த நாம் எமது இறைமையை இழக்கவில்லை. ஆகையினால் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது இறைமையைப் பயன்படுத்தி தாயகத்தில் அமைக்க முடியாத ஒரு கட்டுக்கோப்பான அதிகாரமையத்தை புலத்தில் உருவாக்கவேண்டும்.

**இன்றைய நாளில் இலங்கையின் பேசுபொருளாக உள்ள சனாதிபதி தேர்தல் தொடர்பான தங்கள் கருத்தென்ன?**

என்றுமே இலங்கையின் சனாதிபதி தேர்தல் என்பது யார் மாபெரும் சிங்கள பேரினவாத சக்தி என்பதை காண்பிப்பதற்கான மோதலே. எனவே இதில் தமிழர்கள் பங்கு தமிழ் தேசிய தலைமைத்துவத்தின் பலத்திலும் தமிழ்த் தேசிய விடுதலை முனைப்புகட்கு யார் குறைந்தளவு முட்டுக்கட்டை போடுவார்கள் என்பதை பொறுத்தும் அமையும். இந்நிலையில் எமக்கான தமிழ் பொது வேட்பாளர் என்பதே முதல் தேர்வு ஆனால் களத்திலும் புலத்திலும் இதற்கான சரியான தயாரிப்புகள் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்படாதது எம் பலவீனத்தின் வெளிப்பாடு. இதற்கான அழுத்தத்தை நாம் உரிய நேரத்தில் வழங்கவில்லை என்பதுடன் எமது தேசிய அவாவை வெளிப்படுத்தவல்ல ஓர் சந்தர்ப்பத்தை தவற விட்டுவிட்டோம். இத்தேர்தலில் தேசிய விடுதலை எனும் இலக்கு தெளிவற்று தெரிவதால் எம் தமிழ் உறவுகளை குறுகிய அன்றாட தேவைகளின் பால் ஈர்த்து சிதறிடிக்கப்பட்ட முடிவுகளையே எட்ட வைக்கும்.. இந்நிலையிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை கருத்தில் கொண்டு அடுத்துவரும் அரசியல் நிகழ்வுகளுக்காக நம்மை தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் தயார்ப் படுத்தவேண்டும்.

6ம் பக்கத் தொடர்ச்சி... சிவாஜிலிங்கத்திற்கு

13அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தபோது அண்ணன் சிவாஜிலிங்கம், அந்தக் கோரிக்கைகளை ஏதாவது ஒரு வேட்பாளர் முழுமையாக ஏற்றுக்கொண்டால் போட்டிக் களத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார். அப்போதும் அவர் குறித்து ஐந்து கட்சியின் எந்தவொரு நபர்களும் கவனத்தில் கொள்ளவில்லை. அதன்பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் அர்ப்பணிப்புடன் எடுத்த முயற்சியை கூட்டமைப்பு முறித்துக்கொண்டு வெளியேறியதும் தமிழ் மக்கள் கூட்டணியோ அல்லது ஈ.பி.ஆர்.எல்.எப்போ மக்களை தீர்மானிக்குமாறு அறிவிப்பு விடுத்தவர்கள் தேசிய விடுதலைப்பயணத்தில் நான்கு தசாப்தங்களாக பயணிக்கும் அண்ணன் சிவாஜியை ஆதரிக்குமாறு கூற திராணியற்ற நிலையிலேயே இருக்கின்றார்கள்

**கேள்வி:- சிவாஜிலிங்கத்திற்கான ஆதரவுத்தளம் எவ்வாறு உள்ளது?**

பதில்:— நாம் பேரினவாதிகளின் விமர்சனத்திற்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் பிரச்சாரப் பணிகளை முன்னெடுக்கும் அதேவேளை, தமிழ்த் தரப்பின் பொய்யான பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் பயணிக்க வேண்டியுள்ளது.

இதுவொரு சவால்மிக்க பயணமாக இருந்தாலும் எமது கொள்கையில் பற்றுறுதியாக நின்று பயணிக்கின்றோம். எவ்வளவு கடினமான பாதையாக இருந்தாலும் அண்ணன் சிவாஜிக்கு கிடைக்கப்போகின்ற வாக்குகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கொள்கைக்கு கிடைக்கும் நேர்மையான இதயசுத்தியுடன் அளிக்கப்படுகின்ற வாக்குகளே ஆகும் என்பது மட்டும் உறுதியானது.

# அரசு உறுதியளித்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் ஈழத்தமிழர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது



தமிழ்நாட்டில் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் ஈழத் தமிழர்கள் 38, பங்களாதேசத்தைச் சேர்ந்த 33 பேர் பல்கேரியா, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 65 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 3 நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் தமிழக அரசின் சார்பில், திருச்சி வருவாய் கோட்டாட்சியர் அன்பழகன், அகதிகளுக்கான தனித் துணை ஆட்சியர் சுதந்திரராஜ், க்யூ பிரிவு துணை கண்காணிப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். 45 நாட்களில் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அதிகாரிகள் உத்தரவாதம் அளித்தனர். இதையடுத்து 3 நாட்களாக நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. இந்நிலையில் சிறப்பு முகாமை மூடி, இலங்கைத் தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றும், இல்லையென்றால் விரைவில் சிறப்பு முகாமை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும் என்றும் நாம் தமிழர் கட்சி மற்றும் ஈழத்தமிழர் வாழ்வுரிமக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்புகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- சோரா இளையவன்**

## மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

யார் வெற்றி பெற்றாலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வோம் எனும் தொனிப் பொருளில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் கவனயீர்ப்பு ஊர்வலமும் போராட்டத்திலும் நேற்று சனிக்கிழமை ஈடுபட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்பாட்ட பேரணி மட்டக்களப்பு திருமலை வீதியில் ஆரம்பித்து நகர் மணிக் கூட்டு கோபுரம் வரை சென்று அங்கிருந்து மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் காணாமல் போன உறவுகள் யார் வெற்றி பெற்றாலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்



வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்வோம். உண்மை, நீதி, இழப்பீடு, 6 ஆயிரம் ரூபா இடைக்கால கொடுப்பணவு மீள இடம்பெறாமை போன்ற சுலோகங்கள் மற்றும் காணாமல் போன உறவுகளின் புகைப்படத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் பகல் 12 மணிவரை ஈடுபட்டு அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.

2ம் பக்கத் தொடர்ச்சி...300 பேரைக்

கலந்துகொண்ட சாரதி ஊடகவியலாளரிடம் தெருவித்தமை தேர்தலில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதோடு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மத்தியில் மிகப்பெரும் கவலைகளையும் உருவாக்கியுள்ளதாக அங்கிருந்து எமது சிறப்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கருத்துத் தெரிவித்த சாரதி, வெள்ளை வான் கடத்தலுடன் தனக்கு தொடர்பில்லை என்று கோத்தபாய தற்போது தெரிவித்து வருகிறார். ஆனால் அவரே இதன் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டவர். இவ்வாறு கடத்த பயன்படுத்திய வேன்களில் ஒன்றினது சாரதியாக நானும் பணிபுரிந்துள்ளேன். இந்தக் கடத்தலுக்கு காவல்துறையினரும், இராணுவத்தினரும் பெரிதும் ஒத்துழைப்புகளை வழங்கினார்கள். கடத்தல் தொடர்பில் கோத்தபாய பிரிகேடியர் ஒருவருக்கும், மேஜர் ஒருவருக்கும் கட்டளைகளை வழங்குவார். அவர்களே இதனை வெற்றிகரமாக செயற்படுத்துவர். இதன் போது நபர்களை கடத்துவதற்கு வாகனமொன்று பயன்படுத்தப்படுவதுடன், அவரை மறைத்து வைத்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தும் இடத்திற்கு பிறிதொரு வாகனத்திலேயே அழைத்துச் செல்வார்கள். இந்த இடங்களில் அவர்கள் மறைத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்படுவார்கள். பின்னர் மேலதிக தகவல்களை பெறுவதற்காக அவர்கள் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்படுவார்கள். இவ்வாறு பல கொடுமைகள் செய்த பின்னர் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள். பின்னர் சடலத்தில் உள் உறுப்புகளை அகற்றிவிட்டு மொணராகலை — சீத்தாவக்கை காட்டுப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் போடுவார்கள். அந்த குளத்திலே 100 க்கும் அதிகமான முதலைகள் வாழுகின்றன. இன்றும் கூட நீங்கள் அந்த குளத்தை சோதனையிட்டால் மனித எலும்பு கூடுகள் கிடைக்கப்பெறும். நான் இவர்களுடன் இணைந்து செயற்பட்ட போது இருவர் இவ்வாறு கடத்தப்பட்டு கொலைச் செய்யபட்டனர். அதில் இரண்டாவது நபரான 60 வயதுடைய ஒருவரை கடத்தும் போது இவரது பிள்ளை கதறியதை பார்த்ததும் எனக்கு அங்கிருக்க மனவர்த்தமாக இருந்தது.

பின்னர் இங்கிருந்து சென்று விகாரையொன்றில் வாழ்ந்து வந்தேன். ஆனால் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று பின்னர் இவர்களுக்கு எதிராக முறைபாடளிக்க நடவடிக்கை எடுத்தேன். இந்த விவகாரம் தொடர்பில் மிரிஹான காவல்நிலையத்தில் முறைபாடளித்தபோது, நிலையப் பொறுப்பதிகாரியாகவிருந்தவர் அதனை விசாரணைக்குட்படுத்தாமல் மறைத்து விட்டார். பின்னர் ஊடகங்களுக்கு தெரிவிக்கலாம் என்று அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபோது ஊடகங்களும் இதனை வெளியிட மறுத்துவிட்டன. இந்நிலையிலே அமைச்சர் ராஜித்தவின் ஆதரவுடன் இதனை பகிரங்கப்படுத்துகிறேன் என்று எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

4ம் பக்கத் தொடர்ச்சி...தமிழர்களை

2015ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நிபந்தனையின்றி ஆதரவளித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடீரென சமஸ்டி பற்றி பேசுவது தமிழ் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் சஜித் பிரேமதாஸ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனநிலையைக் கொண்டிருக்கின்ற அதேநேரம், அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பானது இந்த விடயங்களை தமிழ் மக்களிடத்திலிருந்து மறைத்து தமிழ் மக்களின் வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு கடும்பிரயத்தனத்தினை முன்னெடுத்துள்ளது.

அதுமட்டுமன்றி, வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்; இனப்பிரச்சினை தீர்வானது ஒருமித்த நாட்டிற்குள் என்று தமிழிலும், ஏக்கிய ராஜ்ய என்று சிங்களத்திலும், யுனிற்றி என்று ஆங்கிலத்திலும் ஒன்றுக்கு ஒன்று முரணான வகையில் கூறப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் அடுத்த பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் இடம்பெற வேண்டுமாயின் அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமாகும். ஆகவே மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லையேல் கூட்டமைப்பு நிபந்தனையின்றி ஆதரவளித்துள்ள சஜித் பிரேமதாஸவினாலோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவினாலேயோ (ஒருவேளை ஆட்சியில் இருந்தாலும்) எதுவுமே செய்யமுடியாது என்று கைவிரிக்கும் நிலையே ஏற்படும் என்பதும் குறிப்பிடத் தக்கது.


5ம் பக்கத் தொடர்ச்சி...தாயகத் தமிழினமே

அதில் ஒருகட்சியானது தனது முடிவினை பகிரங்கப்படுத்தி ஆரம்பத்திலேயே வெளியேறவும் ஏனைய கட்சிகள் உடன்பாட்டிற்கு வந்தன. வேட்பாளர்கள் நிபந்தனைகளை நிராகரித்தால் அடுத்த அணுகுமுறை குறித்து தீர்மானிப்பதாகவும் அவர்களாகவே முன்மொழிந்து இணக்கப்பாட்டிற்கு வந்தனர். ஆனால் ஈற்றில் அவர்களாகவே முடிவுகளை அறிவித்து விட்டார்கள். இதன் மூலம் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் தமிழினத்தினை முட்டாளாக்கியுள்ளனர் என்பது வெளிப்படையாகின்றது. ஆகவே தமிழினம் தமிழ்த் தேசியத்தில் பற்றுறுதியுடன் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு தலைப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

5ம் பக்கத் தொடர்ச்சி...எம்மினத்தின்

அம்சமாகும். ஆனால் அத்தரப்புக்கள் சிதறியுள்ளமையால் இனவிடுதலையை எதிர்பார்த்திருக்கும் சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய அரசியல் சிந்தனைக்கு எதிராக பெரும்பான்மையுடன் இணைந்து பயணிக்கும் தமிழ்த் தரப்புக்களும், தமிழ் பேசும் தரப்புக்களும் ஒன்றாக இணைந்தே செயற்படுகின்றன. இதனால் தமிழ்த் தேசிய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஏற்றிருக்கும் மக்கள் பெரும் நெருக்கடிக்குள் உள்ளாகி—யிருக்கின்றார்கள். எமது முயற்சியின் பிரகாரம் ஐந்து கட்சிகள் ஒன்ணைந்த பயணத்தினை கொள்கைப்பற்றுறுதியுடன் இனம்சார்ந்து சிந்தித்து செயற்பட்டிருக்குமாயின் இத்தகைய கையறு நிலைமையானது கிழக்கில் ஏற்பட்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே ஐந்து கட்சிகளின் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய இணைவும் சுயலாபத்தை மையப்படுத்திய பிரிவும் தற்போது கிழக்கு மாகாண தமிழ் மக்களை அரசியல் அநாதைகளாக்கியுள்ளது என்பதே கசப்பான உண்மையாகும். இதுபற்றிய சிந்தனைகளை தமிழ்த் தேசிய தரப்புக்கள் இனியாவது சிந்திக்குமா என்ற கேள்வியும் வெகுவாக ஏற்பட்டுள்ளது என்றார்.

# மனித முன்னேற்றத்துக்கு வித்திட்ட அறிவியல் கண்டுபிடிப்புகள்




யுனெஸ்கோ அமைப்பின் வேண்டுகோளின்படி ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 10ஆம் தேதி உலக அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. மக்களிடையே அறிவியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மனித இனத்திற்கு முன்னேற்றத்தை காணவும், அமைதியை நிலைநாட்டவும் அறிவியல் பயன்படவேண்டும். மேலும் நாடுகளிடையே தங்களது அறிவியல் கண்டுபிடிப்புகளையும் தகவல்களையும் ஒருவருக்கு ஒருவர் தங்குதடையின்றி பரிமாறிக் கொள்ளுதல். அதுமட்டுமன்றி அறிவியலை சமூக மேம்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்துவது என்கிற உறுதிமொழியை நினைவுபடுத்திக் கொள்ளவும், அறிவியலுக்கும் அறிவியல் மனப்பான்மைகளுக்கும் சமூகத்தில் ஏற்படும் சவால்களையும் எதிர்ப்புகளையும் தக்கவாறு எதிர்கொள்ளுதல் என முக்கிய குறிக்கோள்களை நினைவு கூரும் வகையில் உலக அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த வருடம் இத்தினத்தின் நோக்கம் அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லாத் தரப்பினருக்கும் தங்குதடையின்றி போய்ச்சேர வேண்டும் என்பதாகும். தொடக்க காலத்தில் மனிதன் அறியாமையில் மூழ்கி கிடந்த போது அவனுக்கு இயற்கை தொடர்பான பல கேள்விகளுக்கு விடை தெரியாமல் இருந்தது. இரவு, பகல், காற்று, மழை, இடி, மின்னல், வெள்ளம், பூகம்பம், தீ, கிரகணங்கள், ஆழிப்பேரலை போன்றவற்றிற்கு விடை தெரியாத போது, தன்னை மீறிய சக்தி ஒன்று உள்ளது என்று நம்ப தொடங்கினான். அவைகளை கண்டு அச்சம் கொண்டான். பிறகு வழிபடவும் தொடங்கினான். இருந்தபோதிலும் மனிதனுக்கு இயற்கையாய் அமைந்துள்ள எதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்கிற உந்துதல் காரணமாக தொடர்ந்து விடைதேட தொடங்கினான். மற்ற எல்லா உயிரினங்களை விட மனிதனுக்கு உள்ள சிறப்பான குணம் யாதெனில் தனக்கு தெரிந்த செய்திகளையும் தான் அறிந்த தகவல்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டது. இதன் காரணமாக ஒரு தலைமுறையில் அனுபவத்தின் வா—யிலாக அறியப்பட்ட செய்திகள் தொடர்ந்து அடுத்தடுத்த தலைமுறைக்கு பல்வேறு வகைகளில் கொண்டுசெல்லப்பட்டது. இதன் காரணமாக முன்பிருந்த தலைமுறையை விட அடுத்து வந்த தலைமுறை முன்னேறிய சமூகமாக மாற முடிந்தது. பானை ஓடுகள், பாறைகள், பட்டு துணிகள், கற்கள், இவைகளிலெல்லாம் தன்னுடைய கருத்துகளை எல்லாம் பதித்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்தான். இப்படியாக அறிவியல் கொஞ்சம் கொஞ்சமாக வளரத் தொடங்கியது.


## அறவியல் தின சிறப்புக் கட்டுரை

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சு எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தாள்களில் அச்சடிக்கப்பட்டு புத்தகமாக மாறியபோது அறிவு மூலைமுடுக்கெல்லாம் சென்றது. இதன் தொடர்ச்சியாக ஐரோப்பாவில் மறுமலர்ச்சி காலம் என்று சொல்லக்கூடிய அறிவியல் புரட்சி ஏற்பட்டது.

எண்ணற்ற அறிவியலாளர்கள் பல துறைகளிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கொண்டுவந்தனர். இவைகளெல்லாம் மனிதகுலம் மேம்படுவதற்கு தக்கதாய் அமைந்தது. மருத்துவத்துறையில் மனிதன் மகத்தான புரட்சிகளை கண்டான். இதன் காரணமாக மனித ஆயுளை நீட்டிக்க முடிந்தது. உடலில் பழுதுபட்ட உறுப்புகளை நீக்கிவிட்டு மாற்று உறுப்புகளை வைத்துக்கொள்ள முடிந்தது. அதைப்போல புவியீர்ப்பு விசையை தாண்டி இந்த பூமிப் பந்தை விட்டு வெளியே சென்று விண்வெளியில் வலம் வர முடிந்தது. சந்திரனில் கால் பதிக்க முடிந்தது. செயற்கைக்கோள்களை பூமிக்கு மேலே நிலைநிறுத்தி 24 மணி நேரமும் தான் வசிக்கும் இப்புவியை கண்காணிக்கவும் முடிகிறது.

அறிவியல் புரட்சி மனித இனத்திற்கு மாபெரும் நன்மைகள் செய்தது. ஒருபுறம் என்றால் இன்னொரு புறம் பல்வேறு பாகுபாட்டின் காரணமாக மனித இனத்தை கொத்துக்கொத்தாக அழிப்பதற்கும் பயன்பட்டது. இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் ஜப்பான் நாட்டின் மீது அணுகுண்டு வீசப்பட்டு ஒரு சில நிமிடங்களில் லட்சக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று சேர்க்கவும் அறிவியல் வழிகோலியது. அறிவியல் என்பது கூரான கத்தியை போன்றது. அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது, அதுயார் கைகளில் உள்ளது என்பதை பொறுத்தது. அதைப்போலவே அறிவியல் கண்டுபிடிப்புகள் எல்லாம் எல்லா காலத்திலும் எல்லாத் தரப்பினராலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. அறிவியல் அறிஞர்கள் கொல்லப்பட்டனர். கல்லடி பட்டனர். சிறை சென்றனர் வாழ்ந்த காலத்தில் அறிவியலாளர்களும் அவர்களது கண்டுபிடிப்புகளும் நிராகரிக்கப்பட்டாலும் பிற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எந்த சமூகம் அவர்களை தாக்கியதோ அவையே பிற்காலத்தில் தூக்கிக் கொண்டாடியதை நாம் வரலாற்றில் காண்கிறோம். நாம் வாழும் பூமி தட்டையானது. சூரியன் உள்பட எல்லா கோள்களும் நமது பூமியை மையமாக வைத்து சுற்றி வருகின்றன என்று பல ஆண்டுகாலம் மக்கள் நம்பி வந்தனர். தொலைநோக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உலகம் உருண்டையானது, பூமி உள்பட எல்லாக் கோள்களும் சூரியனை மையமாக வைத்து சுற்றி வருகின்றன என்ற உண்மைகளை கூறும்போது, அதுகாறும் இருந்து வந்த நம்பிக்கைகள் தகர்க்கப்பட்ட போது உலகம் அந்த கண்டுபிடிப்புகளை பாராட்டவில்லை. தண்டித்தது. ஆனால் பிற்காலத்தில் மீண்டும் மீண்டும் அந்த உண்மைகள் வெவ்வேறு கண்டுபிடிப்புகளின் வாயிலாக நிறுவப்பட்டபோது பழமைவாதங்கள் சாய்ந்தன. அறிவியல் கோலோச்சியது.

அறிவியலை அறிந்திருப்பது வேறு, அறிவியல் மனப்பான்மை என்பது வேறு. கற்ற அறிவினை அன்றாட வாழ்வினில் பயன்படுத்துவதே அறிவியல் மனப்பான்மையாகும். அதுஒன்றே மனித இனத்திற்குள் இடையே உள்ள வேறுபாடுகளை களைந்து ஒப்பற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும். அறியாமையே மனித இனத்திற்கு ஏற்படும் எல்லா கேடுகளுக்கும் மூலகாரணம் என்று புத்தர் கூறினார். ஆகவே இந்நாளில் அறியாமை என்னும் இருளை விரட்டி அறிவெனும் தீபத்தை ஏற்றுவோம்.



## கார்களுக்கு கவசமாகும் மரங்கள்

ஜப்பானின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அண்மையில், கார்களின் பாகங்களை, பதப்படுத்தப்பட்ட மரத்தால் ஆன பொருளால் தயாரிக்கலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறது. ஏற்கனவே, மரச் சில்லுகளை வேதியியல் முறையில் சிதைத்து, செல்லுலோஸ் நுண் இழைகளை தயாரிக்கும் தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது.

இதே தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கடினமான, எடை குறைவான செல்லுலோஸ் நுண் பொருளை வைத்து, கியோட்டோ பல்கலைக் கழக விஞ்ஞானிகள், காரின் வெளிப் பகுதி மற்றும் உள் அமைப்புகளை வடிவமைத்து, “நேனோ செல்லுலோஸ் வாகனத்தை உருவாக்கி சோதித்து வருகின்றனர்.

காருக்கு உலோகத்திற்கு பதிலாக, செல்லுலோஸ் நுண் இழை பாகங்களை பயன்படுத்தும்போது, காரின் மொத்த எடையில், 10 சதவீதம் குறைகிறது. எடை குறைவான செல்லுலோஸ் வாகனம், அதன் வாழ்நாளில் உமிழும் கார்பனில், 2,000 கிலோ குறையும். சில ஆண்டுகளில், செல்லுலோஸ் வாகனங்களை எதிர்பார்க்கலாமா?

